
# இறையியல் கோலங்கள்

வடிவம் 17 மார்ச் 2004 வண்ணம் 1



# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# Irai Iyal Kolangal

Tamil Theological Quarterly


| | | |
|---|---|---|
| **Vol** | : | **17** |
| **No** | : | **01** |
| **March** | : | **2004** |

| | | |
|---|---|---|
| **வடிவம்** | : | **17** |
| **வண்ணம்** | : | **01** |
| **மார்ச்** | : | **2004** |



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,

இலங்கை.

ஆசிரியர் :

அருள்திரு : ச.வி.ப. மங்களராஜா

துணை ஆசிரியர் :

அருள்திரு : ப.ஜோ. ஜெபரட்ணம்
அருள்திரு : பி. கிறிஸ்துநாயகம்

நிர்வாக குழு :

சகோ. பா.ஜோ.அ. பிறாயன்
சகோ. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ
சகோ. செ. பிரான்சிஸ் அசிசி
சகோ. பி.தே. யூட்தாஸ்.
சகோ. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்
சகோ. எ. எட்வினாதன்

வெளியீடு :

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.

Editor :

*Fr. S.V.B. Mangalarajah*

Sub Editors :

*Fr. P.J. Jebaratnam*
*Fr. P. Christunayagam*

Administrative board:

*Bro. B.J.A. Brian*
*Bro. S. Laconz Figurado*
*Bro. S. Francis Assisi*
*Bro. F.T. Judethas.*
*Bro. J. Jesly Jehananthan*
*Bro. E. Edwinathan*

Publication :

*St. Francis Xavier's Seminary,*
*Columbuthurai Jaffna, Sri Lanka.*
*Tel No : 021 - 2222482.*

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடமிருந்து . . .

02. மறையறிவிப்பியல் பற்றிய திருமடல்களின் சுருக்கம்
அருட்சகோதரன் அ. கொன்பியூசியஸ் அ.ம.தி.

03. மறைபரப்புப் பணியில் கிறிஸ்தவ குடும்பங்ககளின் முக்கியத்துவம்
செல்வி து. டெனி

04. அருளாளர் ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு முறை
அருட்சகோதரன் சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ

05. திருச்சபையின் நற்செய்தியறிவிப்பும் மற்றைய மதங்களும்
அருட்சகோதரன் பாலதாஸ் பிறாயன்

06. கிறிஸ்துவின் உயிர்ப்பே நற்செய்திப் பணியின் உதயம்
அருள்திரு A. மகன் அலோசியஸ்

07. அன்பியமும் நற்செய்தியறிவிப்பும்
அருள்திரு M.V.E. ரவிசந்திரன்

08. இவ் இதழின் இறையியலாளர் -14
அருட்சகோதரன் A. ஜேம்ஸ் நாதன்

09. Synopsis

10. குறுக்கெழுத்துப் போட்டி



# ஆசிரியரிடமிருந்து...

திருச்சபை தன் இயல்பிலேயே நற்செய்தி அறிவிக்க அனுப்பப்பட்ட ஒரு இயக்கமாக செயற்படுகிறது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகின்றது (தி.ந. 1). இதனால் கிறிஸ்துவிடமிருந்து திருச்சபை தான் பெற்றுக்கொண்ட இந்தப் பணியின் கனாகனத்தை உணர்ந்து முழுமனதோடு தன்னை நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு அர்ப்பணிக்க வேண்டியதாயிருக்கின்றது (மீ.ப. 1).

இன்றைய காலகட்டத்தில் அதாவது நற்செய்தி அறிவிப்புப் பணியை செய்வதற்கு பல்வேறுவிதமான தடைகளும் எதிர்ப்புக்களும் உலகளாவிய ரீதியில் கிளம்பியுள்ள நிலையில், திருச்சபை தனது அழைப்பை நிறைவேற்றுவதற்கான புதிய பரிணாமங்களையும் வழிகளையும் கண்டறிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்று கூறமுடியும். உலகில், சிறப்பாக ஆசிய நாடுகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற மதமாற்ற தடைச்சட்டங்கள் திருச்சபையின் இப்பணிக்கு விடுக்கப்படும் ஒரு பெரிய சவாலாகும்.

இவற்றின் மத்தியில் திருச்சபை தனது பணியின் ஊற்றை உணர்ந்துகொள்ளவும், இப்பணி எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தவும் கடந்த கால திருச்சபையின் வரலாற்றில், அதிலும் சிறப்பாக எமது நாட்டில் இப்பணி எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை ஆராயவும், இன்றைய நாளில் எமது குடும்ப அன்பிய வாழ்வினூடாக இப்பணியை எவ்வாறு ஆற்றமுடியும் என்பதை உணர்த்தவும் இவ்விதழின் கட்டுரைகள் துணைபுரிகின்றன.

“உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் இதோ நான் உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்” மத் 28. 19,20) என்னும் உயிர்த்த கிறிஸ்துவின் கட்டளை அவர் இன்றும் என்றும் எம்மோடு வாழ்ந்துகொண்டிருப்பதால் எத்தகைய சவால்கள் மத்தியிலும் உயிர்த்துடிப்புடன் நிறைவேற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**அருள்திரு ப. யோ. ஜெபரட்ணம்**

# மறையறிவிப்பியல் பற்றிய திருமடல்களின் சுருக்கம்

சகோ. அ. கொன்பியூசியஸ் அ.ம.தி.

## தொடக்கமாக

"தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21) என இயேசுக்கிறிஸ்து தம் திருப்பணியாளர்களை அனுப்பினார். இத்திருப்பணியாளர்கள் திருச்சபையின் தூண்களாக இருந்து தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தை வாழ்ந்தனர். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மறையறிவிப்புப்பணி இன்றும் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று வாழும் திருச்சபைக்கு கொடுக்கப்படுவதாக கத்தோலிக்க திருச்சபையின் திருமடல்கள் கூறி நிற்கின்றன. இந்த மறையறிவிப்புப் பணி ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்தவளுக்கும் சுமத்தப்பட்ட ஒரு கடமையாகிறது. ஆதலால், திருச்சபை தனதுடைய இயல்பிலேயே 'அனுப்பப்பட்ட' ஒரு இயக்கமாக, நம்பிக்கை கொண்டவர்களின் கூட்டமாக இருப்பதாக திருச்சபையின் வரலாற்றில் காலத்திற்கு காலம் வெளிவந்த மறையறிவிப்பியல் பற்றிய அனைத்து திருமடல்களும் குறிப்பிடுகின்றன. இத்தகைய திருமடல்களில் மிக முக்கியமானவற்றின் உள்ளடக்கத்தை சுருக்கமாக பார்ப்பதற்கு முன்னர் திருச்சபையின் வரலாற்றில் மறையறிவிப்பியல் பற்றிய பார்வை பற்றியும் சிறிது நோக்குவது சிறந்தது.

## திருச்சபை வரலாற்றில் மறையறிவிப்புப்பணியும் ஆரம்ப திருமடல்களும்

மறையறிவிப்பியல் பற்றிய கருத்தின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி நோக்கும் போது எமது பாவனையில் அதிகம் காணப்படும் 'மிஷன்' (Mission) என்ற ஆங்கிலச் சொல்லை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் Mission என்ற

சொல்லின் மூலப்பொருள் 'அனுப்புதல்' அல்லது 'அனுப்பப்படுதல்' எனக் குறிக்கின்றது. 16-17ம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவத்தை பரப்பும் பணியைக் குறிக்க இச்சொல் பாவிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயம் இன்னும் போதிக்கப்படாத இடங்களில், நாடுகளில் அதனை அறிக்கையிட்டு மக்களை மனம் திருப்பி, சில வேளைகளில் கட்டாயமாகவும், கிறிஸ்தவ சமயத்தை நிறுவுவதையே இச்சொல் குறித்தது. 'கிறிஸ்தவ சமயத்திற்க அப்பால் மீட்பு இல்லை' என்ற சிந்தனை மிகவும் உறுதியாக காணப்பட்ட அவ்வேளை அனைவரையும் கிறிஸ்தவ விசுவாசத் திற்குள் உள்ளெடுக்க வேண்டியது கட்டாயம் என்ற கண்ணோட்டம் காணப்பட்டது. ஆனால் இன்று கட்டாயமாக ஏனைய சமயத்தவர்களை மனம் திருப்பி கத்தோலிக்க விசுவாசத்திற்குள் 'இழுக்கும்' நிலை எம் திருச்சபையில் இல்லை. ஏனெனில், மறையறிவிப்பியல் பற்றிய திருச்சபையின் உண்மையான நிலைப்பாடு காலத்தால் வளர்ச்சியும், முழுமையும் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1. ஆரம்ப கால திருமடல்கள்

திருச்சபையின் மறையறிவிப்பியல் பற்றிய ஆரம்ப கண்ணோட்டத்தை பின்வரும் திருமடல்கள் விளக்கியுள்ளன. இத்திருமடல்கள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு (1962-1965) முன்னதாகவே வெளியிடப்பட்டன. திருத்தந்தையர்கள் மறையறிவிப்புப் பணியின் செயன்முறைக் கூறுகள் பற்றி பல திருமடல்களை மிகவும் உறுதியாகவும் விளக்கமாகவும் எழுதினர். அவைகளுள் முக்கியமாக திருத்தந்தை பதினான்காம் பெர்னதித்து வெளியிட்ட "உன்னதமான அது" (Maximum Illud 1919) என்னும் திருமடலும் பதினொராம் பியு வெளியிட்ட "நற்செய்தியின் தூதுவர்" (Evanelei Praecones - 1951) என்னும் திருமடலும், இருபத்திமூன்றாம் யோவான் வெளியிட்ட "தலைமை ஆயர்" (Princeps Pastorum - 1959) என்னும் திருமடலும் குறிப்பிடத்தக்கவை.

ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கம் 1962ல் கூடியபோது திருச்சபை பற்றிய பார்வையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றமானது திருச்சபையின் மறைபரப்பியல் பற்றிய பார்வையிலும் பெரும் தாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்த லாயிற்று. "மறைபரப்புப்பணி" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "நற்செய்திப்பணி" என்னும் சொற்றொடர் வழங்கப்படல் ஆயிற்று. 1964ம் ஆண்டின் இறுதியில் இடம் பெற்ற சங்கத்தின் மூன்றாம் அமர்வில் நற்செய்தி அறிவிப்புப்பணி பற்றி திருத்தந்தை ஆறாவது பவுல் அவர்களின் தலைமையில் கலந்துரையாடப்பட்டது. மறையறிவிப்பு பற்றி ஏற்கனவே கொண்டிருந்த சில பழைய எண்ணக்கருக்கள் புதிய சில சிந்தனைகளைக் கொண்டு மாற்றம் செய்யப்பட்டன.

## 2. இன்றைய முக்கிய திருமடல்கள்

திருத்தந்தை ஆறாவது பவுல் அவர்களின் தலைமையில் திருச்சபையின் நற்செய்திப்பணி பற்றி கலந்துரையாடப்பட்டதையடுத்து "திருச்சபையின் நற்செய்திப்பணி" (Ad gentes Divinitus) என்னும் தலைப்பில் விதித்தொகுப்பு வெளியானது. இவ்விதித் தொகுப்பானது அன்றைய திருச்சமூகத்தில் கூடியிருந்த தந்தையர்களின் மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று 1965 மார்கழித் திங்கள் 9ம் நாள் வெளியிடப்பட்டது. இதன் பின்னர் மீண்டும் திருத்தந்தை ஆறாவது பவுல் அவர்கள் 1975ம் ஆண்டில் இன்றைய உலகில் திருச்சபையின் நற்செய்திப்பணி ( Evangelii Nuntiandi) என்னும் அப்போஸ்தலிக்க மடலை வெளியிட்டார். நற்செய்திப் பணி சார்ந்த திருமடல்களின் வரிசையில் அடுத்ததாக இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை "மீட்பரின் தூதுப்பணி" (Redemptoris Missio) என்ற சுற்றுமடலை வெளியிட்டார். மிக முக்கியமான இந்த மூன்று திருமடல்களும் திருச்சபையின் கடமையான நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றி மிக தெளிவாகவும் ஆணித்தரமாகவும் புதிய உத்வேகத்துடன் விளக்குகின்றன. இவை ஒவ்வொன்றும் நற்செய்திப்பணி பற்றி தரும் படிப்பினைகளை சுருக்கமாக இப்போது பார்ப்போம்.

### 2.1 "திருச்சபையின் நற்செய்திப்பணி" (Ad gentes divinitus)

இரண்டாம் வத்திக்கான் திருச்சபையானது "திருச்சபையின் நற்செய்திப் பணி" என்னும் இந்த விதித் தொகுப்பினூடாக இறைமக்கள் அனைவரும் நற்செய்திப் பணியின் முக்கியத்தை உணரும் வண்ணம் கேட்டுநிற்கிறது. இதன் பார்வையில், அனைவருக்கும் மீட்பின் அருளடையாளமாக விளங்க கடவுளால் உலகின் எல்லா மக்களினத்தார்க்கும் அனுப்பப்பட்டது தான் திருச்சபையாக இருக்கின்றது. ஆதலால், திருச்சபையானது தன் இயல்பான பொதுத்தன்மையின் உள்ளார்ந்த கோரிக்கைகளுக்கு ஏற்பவும், தன்னை நிறுவியவரின் கட்டளைக்குப் பணிந்தும் எல்லா மக்களிற்கும் கொடுக்கப்பட்ட நற்செய்தியை பறைசாற்ற முயல்கிறது எனவும் இவ்விதித்தொகுப்பு கூறுகிறது.

> அனைவருக்கும் மீட்பின் அருளடையாளமாக விளங்க கடவுளால் உலகின் எல்லா மக்களினத்தார்க்கும் அனுப்பப்பட்டது தான் திருச்சபையாக இருக்கின்றது.

இறைத்தந்தையின் திட்டப்படி அனுப்பப்பட்ட கிறிஸ்து தமது திருத் தூதர்களைப் பார்த்து "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத் 28:19~20) எனக் கூறி நற்செய்திப்பணியை கையளித்தார். ஆகவே கிறிஸ்துவை, அவர் தரும் நம்பிக்கையை நிறைவாழ்வை பரப்புகிற கடமையானது திருச்சபையின் மேல் சுமத்தப்பட்ட கடமையாகிறது. இக்கடமையை ஆயர் குழுவானது பேதுருவின் வழித்தோன்றலான திருச்சபையின் தலைமை ஆயரோடு இணைந்து தம் திருப்பணியாளர்களின் உதவி கொண்டு செய்வதற்கு திருத்தூதர்களிடம் இருந்து மரபுரீதியாக பெற்றுக் கொள்கிறது. அதாவது, திருச்சபையின் உள்ளியல்பிலிருந்தே நற்செய்தியை போதிக்கும் பணி பிறக்கிறது என்பதை இவ்விதித்தொகுப்பு சுட்டி நிற்கிறது.

நற்செய்திப் பணிக்கான காரணங்களையும், தேவைகளையும் பற்றியும் இவ்விதித்தொகுப்பு கூறுகின்றது. எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென கடவுள் விரும்புகின்றார் (1 திமொ 2:4) இவராலன்றி எவராலும் மீட்பு இல்லை (திப 4:12) இவரது இத்தகைய விருப்பமே நற்செய்தி அறிவிக்க ஏதுவான காரணியாகிறது. இதனைவிட, நற்செய்திப் பணியால் இறைவன் மாட்சிமைப்படுத்தப்படுகின்றார். தூய ஆவியானவரின் தூண்டுதலால் நம்பிக்கை கொண்டோரின் கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆகவே, நற்செய்தியை அறிவிக்கும் பணியானது கிறிஸ்துவினுடைய உயிருள்ள உறுப்பினர்களாகிய இவர்களது தலையான கடமையாகின்றது என்று இவ்விதம் தொகுப்பு கூறிநிற்கின்றது.

## 2.2 இன்றைய உலகில் திருச்சபையின் நற்செய்திப் பணி (Evanelii Nuntiandi)

காலத்துக்குக் காலம் திருச்சபையின் அனைத்து ஆயர்களும் கூடி திருச்சபை சார்ந்த பல விடயங்களைப் பற்றி கலந்துரையாடி திருச்சபையின் அப்போஸ்தலிக்க மடல்களை, கொள்கைத் திரட்டுக்களை வெளியிடுவது வழக்க மாகும். இதற்கேற்ப 1974ம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் பவுல் தலைமையில் கூடிய ஆயர்கள் "திருச்சபையின் நற்செய்திப்பணி" என்னும் கருப்பொருளில் ஆழமாக சிந்தித்தனர். இன்றைய நவீன உலகில் நற்செய்திப்பணியானது எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் எனவும், இப்பணியில் ஏற்படும் சவால்கள்

எத்தகையவை எனவும் ஆரய்ந்து பார்த்தனர். இவற்றை உள்ளீடாகக் கொண்டு திருத்தந்தை அவர்கள் "இன்றைய உலகில் திருச்சபையின் நற்செய்திப் பணி" என்னும் இந்த அப்போஸ்தலிக்க மடலை 1975ம் ஆண்டு மார்கழி 8ம் நாள் வெளியிட்டார்.

இந்த அப்போஸ்தலிக்கமடலானது, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் விதித்தொகுப்பில் கூறப்பட்ட கருத்துக்களை மீள உறுதிப்படுத்துகிறது. அத்துடன், சங்கத்தின் சிந்தனையில் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. "மக்களினத்தார்க்கு" ஏட்டில் "நற்செய்திப் பணி" (Mission) என்ற சொல் வெறுமனே பாவிக்கப்பட்டு இருக்கின்ற போது, இந்த மடலானது "நற்செய்தி பரப்புதல்" (Evangelization) என்னும் சொல் இன்னும் ஆழமான அர்த்தத்துடன் பாவிக்கப்படுகிறது. இருப்பினும், உலகின் எல்லா மக்களினத்தார்க்கும் நற்செய்தியை எடுத்துரைப்பது இப்போதும் திருச்சபையின் உள்ளார்ந்த பணியாகவும் கடமை யாகவும் இருப்பதாக இம்மடல் கூறி நிற்கிறது.

**நவீன உலகில் நற்செய்தியை அறிக்கையிட்டுப் பரப்பும் பணி இன்றும் திருச்சபையின் கடமையாக இருக்கின்றது.**

திருத்தந்தை ஆறாம் பவுல் நற்செய்தியை பரப்புதலானது திருச்சபையின் அழைப்பும், அருளும், அதன் அடையாளத்தைக் காட்டும் பணியுமாகும் என இந்த அப்போஸ்தலிக்க மடலிலும் கூறி நிற்கின்றார். ஆகவே, நவீன உலகில் நற்செய்தியை அறிக்கையிட்டுப் பரப்பும் பணி இன்றும் திருச்சபையின் கடமையாக இருக்கின்றது. என வலியுறுத்திக் கூறப்படுகிறது. நற்செய்தியை எடுத்துரைத்தல் திருச்சபையை பொறுத்தமட்டில் ஒரு விருப்பத்திற்கு உரிய இது திருச்சபையின் மேல் சுமத்தப்பட்ட ஒரு கடமையாகவே இருப்பதாகவும், இதன் இயல்பாகவும், இயேசுக்கிறிஸ்துவிடம் இருந்து பெறப்பட்ட தவிர்க்கமுடியாத பணியுமாகிறது. அத்துடன், திருச்சபை ஒரு மறைபரப்பாளர் மட்டுமல்லாது, இவளின் மறைபரப்பினால் தானும் மறைபரப்பப்படுகின்றாள் எனவும் இம்மடல் குறிப்பிடுகிறது.

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் இந்தச் சுற்றுமடலானது மிகவும் பூரணமாகவும் அதிகாரமுள்ள முறையிலும் வெளியிடப்பட்டுள்ளதாக


கூறப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவெய்தி இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்த பின்னும் சங்கத்தின் நற்செய்தியறிவிக்கும் பணி பற்றி மிகவும் துல்லியமாகவும், அதிகாரத்துடனும் கூறுகின்றது. அத்துடன், மூன்றாவது தசாப்தத்தில் எவ்வாறு இப்பணியை முன்னெடுத்துச் செல்வது பற்றியும் இச்சுற்றுமடல் விளக்குகின்றது. கிறிஸ்துஇயல், இறுதிக்கால நிறைவு இயல் பற்றிய ஆழமான பார்வையில் திருச்சபையின் நற்செய்திப்பணியின் அவசியத்தை சுட்டிக் காட்டுகின்றது. முழுத்திருச்சபையும் முழு உலகிற்காக நற்செய்திப் பணியை ஆர்வத்துடன் மேற்கொள்ள அழைப்பு விடுக்கிறது. இதன் ஊடாக அனைத்து மக்களின் மீட்பிற்கும் உழைக்கும்படியாக வலியுறுத்துகிறது.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு திருமுழுக்கு பெறும் ஒவ்வொருவரும் அவரால் கொடுக்கப்பட்ட நற்செய்தியறிவிப்புக்கான கட்டளையை பெறுகிறார்கள். ஆதலால் மூன்றாம் தசாப்தத்தின் ஆரம்ப காலத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் இப்பொழுது கிடைக்கும் தொடர்புசாதன, போக்குவரத்து வசதிகளை நற்செய்தி அறிவிப்புப்பணிக்காக பயன்படுத்த ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இன்று உலக மக்கள் பலர் மனித உரிமைக்காக, வாழ்வின் அர்த்தத்திற்காக தேடி உழைக்கும் பொழுது இவற்றை தமக்கு சார்பானதாகக் கொண்டு நற்செய்திப்பணிக்கு சிறந்த மனத்தோடும், தாராள உள்ளத்தோடும் செயற்படும்படியாக அழைப்பு விடுக்கிறது.

## முடிவாக

இப்படியாக, இன்றைய இந்த மூன்று திருமடல்களும் எமக்கு நற்செய்திப் பணியின் முக்கியத்துவத்தை நம்பிக்கை கொண்ட எமக்கு தெளிவாக கூறுகின்றன. திருச்சபையின் மட்டிலும், எம் ஒவ்வொருவர் மட்டிலும் இதுபற்றி உள்ள கடமை தெரிகிறது. திருச்சபையானவள் தன்னிலே அனுப்பப்பட்ட திருச்சபையாக இருக்கிறாள். கிறிஸ்து இயேசுவை பறைசாற்றி, அவர் கற்பித்த இறையரசின் மதிப்பீடுகளான அன்பு, ஒற்றுமை, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மன்னிப்பு போன்றவற்றிற்கு சான்று பகர்ந்து வாழ அழைக்கப்படுகின்றாள். முழு மனித விடுதலைக்கான போராட்டத்தில் பலரும் பல வழிகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய நவீன உலகில், கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவரும் இவர்கள் போல் உழைக்க வேண்டும். இத்தகைய இறையரசின் விழுமியங்களுக்காக அயராது உழைக்கின்ற வேளை திருச்சபை தன்னை அனுப்பியவரின் நோக்கத்தை வாழ்கின்றாள், கிறிஸ்துயேசு பரப்பப்படுகின்றார். அனைவரும் உண்மையை அறிந்து மீட்புப் பெறவும் ஏதுவாகின்றது.

# இறைபரப்புப் பணியில் கிறிஸ்தவ குடும்பங்களின் முக்கியத்துவம்




செல்வி து. டெனி - மல்வம் உடுவில்

## முன்னுரை:

குடும்பம் என்பது மனிதனுக்கு மட்டும் உரிய ஒப்பற்ற அமைப்பு. ஏனைய உயிரினங்களுக்கோ, விலங்குகளுக்கோ இவ்வமைப்பு இல்லை. மனித வாழ்க்கைக்குள் குடும்பம் என்கிற அமைப்பு இன்றியமையாதது. அவற்றிலும் கிறிஸ்தவ குடும்பங்கள் இறைவனின் விசேட அழைப்பினையும் அன்பினையும் மாட்சியையும் பெற்றிருக்கின்றன. இது இறைவனின் மாபெரும் கொடையாக இருக்கின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் தமது முன்மாதிரிகையான எடுத்துக்காட்டான சாட்சிய வாழ்வினால் கிறிஸ்துவை உலகிற்கு பறைசாற்றிட வேண்டும். இது அவர்களது முக்கியமான பணியாக இருக்கின்றது. கிறிஸ்தவ விழுமியங்களை தங்கள் வாழ்வில் கைக்கொண்டொழுகி கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் பரதிபலித்து கிறிஸ்துவின் மறுவடிவங்களாக வாழ்ந்து பிறரையும் வாழவைப்பது அவர்களது கடமை. அதற்கேற்ப சமுதாய, அரசியல், பொருளாதார கலாசார சூழலை உருவாக்கி இவ்வுலகில் இறையாட்சி மலர உழைக்க வேண்டும் என்பது இறைவன் விடுத்துள்ள அறை கூவல் "உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என மொழிந்த கிறிஸ்துவை தாம் வாழும் சமூகத்திலும், நாட்டிலும், உலகிலும், தமது வாழ்வாலும் செயலாலும் பிறருக்கு வெளிப்படுத்தி நிற்பது மறைபரப்பாகும். இப்பணியில் கிறிஸ்தவ குடும்பங்கள் எவ்விதம் செயற்படுகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

# குடும்பம் ஒரு வாழ்வியல் கையேடு

குடும்பத்தில் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் ஆகியோர்களது அன்பின் வழியாக நாம் இறையன்பை உணர்கின்றோம். மனித வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கும் தேடலில் முனைந்துள்ள ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு இலட்சியத்தை அமைத்துக் கொள்கிறான். அந்த இலட்சியத்தை அன்றாட வாழ்க்கையில் செயற்படுத்துவதற்கேற்ற ஒரு நெறி முறையினையும் உருவாக்கிக் கொள்கிறான் இந்த இலட்சிய வாழ்க்கை நெறியில் அவன் இறைவனின் சித்தத்திற்குப் பணிந்து அவருடைய திட்டங்களை அறிந்து இறைவனை தன்




வாழ்க்கை வழிகாட்டியாகக் கொண்டு தனது வாழ்க்கைப் பயணத்தை தொடர்கின்ற போது அது ஆன்மீகமாக அமைகின்றது. இந்த வகையில் கடவுள் மீது அன்பு கொண்டு ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசித்து நல்லுறவை வளர்த்து வாழ்ந்த ஒரு குடும்பத்தின் உருக்கமான வரலாற்றை பழைய ஏற்பாடு நமக்குத் தருகின்றது (தொபியாசு 4:16) இவ்வுலகில் கிறிஸ்தவ குடும்பங்கள் எவ்விதம் வாழ வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் நல்லுறவு எவ்வாறு சமூக உறவினை வளர்க்கிறது என்பதை வாழ்ந்து காட்டிய ஓர் ஒப்பற்ற திருக்குடும்பத்தை புதிய ஏற்பாடு நமக்கு தந்திருக்கின்றது.(லூக்கா 1:28)

"குடும்பம் தான் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவையான சமூக நற்பண்புகளின் முதல் பள்ளியாகும். இங்கு தான் பிள்ளைகள் நல்லதொரு மனித சமூகத்தைப்பற்றியும் திருச்சபையைப் பற்றியும் முதன் முதலாக அனுபவ முறையில் அறிய வருகின்றனர். குடும்பத்தின் வழியாகத் தான் பிள்ளைகள் மனிதனின் சமூக கூட்டு வாழ்விற்கும் இறைமக்கள் குழுவிற்கும் படிப்படியாக இட்டுச் செல்லப்படுகின்றனர்"[1]. அன்பு, அறம், நீதி, தியாகம், பரிவு, பாசம், சமத்துவம், சகோதரத்துவம், மன்னிப்பு போன்ற நற்பண்புகளின் பிறப்பிடம் குடும்பமே. இவ்வாறாக இறைவனின் மதிப்பீடுகளையும், கிறிஸ்தவ விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கிறிஸ்தவ குடும்பங்கள் வாழ்வியல் கையேடுகளாக அமைந்து விடுகின்றன.

[1] கிறிஸ்தவக் கல்வி எண் 3/1 பெற்றது கிறிஸ்துவில் நான் பக் 91.

## சாட்சிய வாழ்வில் சரித்திரமாதல்

உலகோடு, சமூகத்தோடு நெருக்கமாக ஒட்டி வாழ்கின்ற சந்தர்ப்பம் அதிகமதிகமாக குடும்பங்களுக்கே இருக்கின்றது. திருமுழுக்கினால் இறைவனின் பிள்ளைகளாக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் மறுவடிவங்களாக செயற்பட வேண்டும். மறைபரப்பின் தூதுவர்களாக திகழ வேண்டும். "கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு சவால் நிறைந்த வாழ்க்கை இந்த சவால்களை எல்லாம் வெற்றி கொண்டு கிறிஸ்துவுக்குள் நாம் இரண்டறக் கலக்கின்ற போது எமது வாழ்வு சாட்சிய வாழ்வாக மாறுகின்றது. எமது வாழ்க்கை பிறருக்கு பாடமாக அமைய வேண்டும். ஒரு கையில் விவிலியத்தையும் மறு கையில் வேற்றுத் தெய்வங்களையும் தூக்கிச் செல்வதல்ல கிறிஸ்தவ வாழ்வு. ஒரே கடவுளை முழுமனத்தோடு ஏற்றுக் கொண்டு ஒரு கையில் விவிலியத்தையும் மறு கையில் அதனால் வரும் சிலுவையையும் இதயத்தில் இறைவனையும் தாங்கிச் செல்வதுதான் கிறிஸ்துவ வாழ்வு, சாட்சிய வாழ்வு, சரித்திரம் படைக்கின்ற புனிதர்களின் வரலாறுகள் எமக்கு சீரிய பாடங்களை கற்பிக்கின்றன. சாட்சிய வாழ்வென்பது ஒரு சாதாரண வாழ்வல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்குள்ள கடமையையும் உரிமையையும் முதலில் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

**"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு - நம்மில்**
**ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வே"**

என்கின்றார் பாரதியார். கிறிஸ்தவர்கள் எமக்குள் ஒற்றுமையும் பிறரன்புச் செயற்பாடுகளும் நிறைந்து காணப்பட வேண்டும். வேற்றுமையும் பிரிவினையும் எமக்கு ஏற்றதல்ல. கிறிஸ்துவின் அன்புக் கட்டளை எமது வாழ்வை நிறைவடையச் செய்ய வேண்டும். "நான் ஒரு கிறிஸ்தவன்" என்று சொல்லித்தான் பிறர் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது பரிதாப நிலை. "இவன் ஒரு கிறிஸ்தவன்" என பிறர் இனங்கண்டு சொல்வது சாட்சிய வாழ்வின் சான்று. ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்திலும் மலருகின்ற விசுவாசம் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சாட்சிய வாழ்விற்கும் அடித்தளம் அமைக்கின்றது.

ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்திலும் மலருகின்ற விசுவாசம் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சாட்சிய வாழ்விற்கும் அடித்தளம் அமைக்கின்றது.



## இன்று நடப்பதென்ன இதயங்கள் கனப்பதென்ன?

இன்றைய நவீன உலகின் நவநாகரீக மோகமும், உல்லாச வாழ்வின் சுயநலப்போக்கும், போட்டியும் பொறான்மையும், அகந்தையும் ஆணவமும், ஏற்றத் தாழ்வுகளும், அடக்கு ஒடுக்கு முறைகளும், சாதிவெறிகளும் சீதனக் கொடுமை களும் சித்திரம் வரைகின்றன மனித இதயங்களில், அன்றாட வாழ்க்கையையே வாழ முடியாது தத்தளிக்கும் குடும்பங்களும், பசி, பட்டினியாலும் நோயாலும் நொந்து மடியும் குடும்பங்களும், வேலையில்லா பிரச்சினைகளாலும் பொருளாதார நெருக் கடியாலும் முடங்கிப் போன குடும்பங்களும், பெற்றோர் பிள்ளை களுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்க்க முடியாது வேதனையோடு வெந்தழும் குடும்பங்களும் எமது சமூகங்களில் நாட்டில் இல்லாமல் இல்லை. இவற்றை விட பகிடிவதைகளும், பாலியல் சேட்டைகளும், விமர்சனங்களும், விதண்டா வாதங்களும், கற்பழிப்புக்களும், கருச்சிதைவுகளும், கொலைகளும் கொள்ளைகளும் எத்தனை குடும்பங்களை தினம் தினம் சாகடித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு அறிஞர் அழகாக கூறுகின்றார் “மனித மனங்கள் கலங்குவது அணுகுண்டுகளால் அல்ல, அன்பற்ற இதயங்களால் தான்” என்று எமது குடும்பங்களையும் சமூகங்களையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற போது அங்கே கிறிஸ்து உயிர் வாழ்கின்றாரா? கிறிஸ்தவம் வாழப்படுகின்றதா? மனிதம் போற்றப்படுகின்றதா? மாண்புகள் பேணப்படுகின்றனவா? எல்லாமே கேள்விதானா? போலி வேஷங்களும், பொய்யான வாழ்க்கையும் தான் இன்று கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இறைவனின் அன்பை முழுமையாக ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் சுவைக்க வேண்டுமானால் அவனுக்கு நல்லதோர் குடும்பம் அமைய வேண்டும். குடும்பங்களில் எவ்வாறான பழக்கவழக்கங்கள், செயற்பாடுகள், சிந்தனைகள், பண்பாடுகள் ஒருவனுக்கு ஊட்டப்படுகின்றனவோ அவற்றையே அவன் தான் வாழும் சமூகத்தில் செயற்படுத்த முனைகின்றான். ஒரு மனிதனுக்கு அவனது குடும்பத்தில் கிடைக்காது போன அன்பு - பாசத்தை, அமைதியை - ஆறுதலை அவன் தான் வாழும் சமூகத்தில் பெற முயற்சிக்கின்றான். அது அவனுக்கு கிடைக்காது போகின்ற பட்சத்தில் அவன் சமூகத்தின் மீது தனது வன்முறையான செயற்பாடுகளை வெளிப்படுத்தி நிற்பதன் மூலம் தன்னை மகிழ்வித்து கொள்கின்றான் என்கிறது உளவியல். பல குடும்பங்கள் ஒன்றிணைந்து வாழ்வது தான் சமூகம். இவ்வாறான சமூகங்களால் நாட்டில் விரும்பப்படாத, வேதனைக்குரிய, வேண்டாத செயற்பாடுகள் நடைபெறுகின்றனவென்றால் குடும்ப வாழ்வில் ஏதோ ஒரு காரணி மனிதனுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. குடும்பம் தான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விற்கும் அடித்தளமாக

இருக்கின்றது. குடும்பங்கள் சீராக அமையவில்லையாகில் சமூகங்கள் சிதைந்து சீரழிந்து போவதில் நியாயமில்லை.

## நிறைவாக

வாழ்க்கை என்பது ஒரு தொடர் பயணம். இத் தொடர் பயணத்தில் நாம் பலவற்றைத் தேடி அலைகின்றோம். இத்தேடல் கருவறை தொடங்கி கல்லறைவரை நீடிக்கின்றது. இத்தேடலின் முடிவில் நாம் இறைவனுக்குள் இரண்டறக் கலக்கின்ற போது தான் எமது கிறிஸ்தவ வாழ்வு முழுமை அடைகின்றது. அர்த்தம் பெறுகின்றது. ஆடம்பரத்தையும், வெளி அடையாளங்களையும் விரும்புகின்ற கிறிஸ்தவ வாழ்க்கையில் 'ஆன்மீகம்' செத்துவிடுகின்றது. உள்ளத்தில் எழுகின்ற பல கேள்விகளுக்கு விடைகூற முடியாது நிலைகுலைந்து நிம்மதியிழந்து திசை தெரியாது அமைதி வேண்டி ஆறுதலை தேடி அலைகின்ற இந்த உலகத்திற்கு அரியதோர் சீரிய பாடம் புகட்ட 'ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை' அழைப்பு விடுக்கின்றது. (திருதூ.பணி.2:42~47, 4:32) குருக்களும், துறவிகளும், புனிதர்களும் தான் மறைபரப்பாளர்கள் என நாம் இனிமேலும் எண்ணிவிட முடியாது. ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் தமது வாழ்வாலும், செயலாலும் சிந்தனையாலும் கிறிஸ்துவின் மறைபரப்பாளர்களாக திகழ வேண்டும். குடும்பங்கள் இல்லையேல் சமூகங்கள் இல்லை. சமூகங்கள் இல்லையேல் நாடுகள் இல்லை. நாடுகள் இல்லையேல் உலகமே இல்லை. இறைவனின் ஆசீயோடு நல்ல குடும்பங்களை அமைத்திடுவோம்.





# அருளாளர் ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு முறை

அருட்சகோ. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ

## முன்னுரை:

மறை அறிவிப்பு என்பது ஓர் இறைபணியாக இருக்கின்ற அதே வேளை இது ஒரு சாதாரணமான காரியமல்ல என்பது உலகறிந்த உண்மை. அதுவும் ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறை பணியினை நோக்கும் போது: அவர் வாழ்ந்த காலப்பகுதி, எமது நாட்டில் நிலவிய அரசியல் நிலமைகள், கத்தோலிக்கரின் நிலை, இவையனைத்துமே ஜோசவ் வாஸ் அடிகளாரின் வாழ்விலும், பணியிலும் மாற்றங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தின. ஆயினும் இறை பராமரிப்பிலே நம்பிக்கை கொண்டிருந்த இவர் தாம் மேற்கொண்ட பயணங்கள், மறை அறிவிப்பில் பயன்படுத்திய வழிமுறைகள், தூரநோக்குடனான பார்வையும் செயற்பாடும், இவற்றின் மூலம் இறைபணியை செவ்வனே சீராக வெற்றிகரமான முறையில் முன்னெடுத்துச் சென்றார்.

## தூரநோக்குடனான செயற்பாடு

பல வழிகளில் பணி செய்த போதிலும் ஜோசவ் வாஸ் அடிகளார் அவரது தூர நோக்குடனான செயற்பாட்டுக்கு பெயர் பெற்றவராக காணப்படுகின்றார். அவரது ஒவ்வொரு செயற்பாட்டிலும் தூரநோக்கு இலட்சியம், எதிர்கால திருச்சபை என்பன துலக்கமாக தென்பட்டது.

தமது செயற்பாட்டை ஆரம்பிக்க முன்னர் தாம் செய்யவிருக்கின்ற பணி, பணித்தளம், அங்குள்ள ஆட்சியாளரின் மனநிலை, அங்குள்ள கத்தோலிக்கரின் நிலை, தாம் ஆரம்பிக்கின்ற பணியை தொடர்ந்தாற்ற வழி, அதனை நடை முறைப்படுத்தும் திட்டம் இவையனைத்தையும் ஒரே கலவையில் போட்டு,

தூரநோக்கு பார்வையிலே சிந்தித்து தெளிவடைந்தவராக தமது முயற்சியினை கட்டம் கட்டமாக ஆரம்பித்தார். தாம் ஆரம்பிக்கின்ற பணி தொடர்ந்தாற்றப்பட வேண்டும் என்பதற்காக தியான சம்பிரதாய குருக்கள் (Oratorians) சபையிலே தம்மையும் இணைத்துக் கொண்டதுடன் அதனை புதிய முறையிலே மீள் சீரமைத்து புத்துயிர் கொடுத்து விட்டார். இவரது இத்தகைய செயற்பாடானது ஏறத்தாள 150 வருடங்களுக்கு மேலாக ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறைவுக்குப் பின்னரும் தொடர்ச்சியாக குருக்களை இலங்கைக்கு அனுப்ப வழிகோலியது. அன்று அவர் எடுத்த முடிவும் செயற்பாடும் பிற்கால இலங்கைத் திருச்சபையை வளர்த்து விட்டதில் பெரும் பங்காற்றியுள்ளது. இத்தகைய செயற்பாட்டினாலேயே தியான சம்பிரதாய குருக்கள் சபையானது திருத்தந்தையாலும், போர்த்துக்கல் அரசனாலும் அங்கீகாரம் பெற்றது.[1]

போர்த்துக்கேய குருக்கள் தமது நாட்டிலிருந்த (திருச்சபை) கத்தோலிக்க மதத்தினை அப்படியே இங்கு நட்டு வைத்தனர். (Transplanted) ஆனால் ஜோசவ் வாஸ் அடிகளார் இங்கே வந்ததும் எமது நாட்டு மக்களின் நடைமுறை, கலாச்சார நிலைக்கேற்ப மண்வாசனையுடன் கூடிய பண்பாட்டு (Inculturation) முறையில் 1687ம் ஆண்டிலேயே கத்தோலிக்க மதத்தினை மீள் ஒழுங்கு படுத்தினார்.[2] 1696ல் கொச்சின் (Cochin) மறை மாவட்ட ஆயர், சபை முதல்வர் ஆகியோரிடமிருந்து வந்த கடிதங்கள் முறையே அவரை இலங்கையின் குரு முதல்வராகவும் (Vicar General of Ceylon), தமது சபைக்குருக்களுக்கு முதல்வராகவும் (Superior) நியமனம் அருளித்தனால் இங்குள்ள நிலமைகளுக்கு ஏற்றவாறு சுயமான முடிவுகளுடன் பணியினை முன்னெடுப்பு செய்வதற்கும் மாற்றியமைப்பதற்கும் சக்தி கொடுத்ததுடன் உறுதுணையாகவும் நின்றது.[3]

தமது தாய்மொழிக்கு அப்பாற்பட்டவர்களுக்கே தமது பணி தேவை யென்பதனால் சுதேச மொழிகளைத் தாம் முயற்சியெடுத்துக் கற்றுக் கொண்டது மட்டுமன்றி சக குருக்களுக்கும் கற்றுக் கொடுத்தார். குறிப்பாக தமக்கு கீழே பணிபுரிந்து கொண்டிருந்த யக்கோமே கொன்சால்வே (Gonsalvez) அடிகளாரை மொழி பயிலவும் அதில் தேர்ச்சி பெறவும் அதன் விளைவாக சுதேச மொழிகளிலே

1. Fr. Perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecarie Ltd Colombo, p32
2. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.99
3. Zeleski L.M. "The Apostle of Ceylon" St. Joseph's Cath. press. Jaffna 1991 p.47

செபங்கள், தியானங்கள் எழுதும்படியும் பணித்ததுடன் உற்சாகமும் உந்து சக்தியும் கொடுத்து வளர்த்துவிட்டார். இவ்வாறான செயற்பாடானது அவரது தாழ்ச்சியையும், அடுத்தவரை ஊக்கப்படுத்தி வளர்த்துவிடுகின்ற பணியினையும் எடுத்துக் கூறுகின்ற அதே வேளை கொன்சால்வே அடிகளாரின் எழுத்தாக்கங்கள் அன்று மட்டுமல்ல பிற்பட்ட காலங்களிலும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டதுடன் ஏனைய இலக்கிய எழுத்தாக்கங்களுடன் போட்டி போடக்கூடிய ஒன்றாகவும் அமைந் திருந்தது. அத்தோடு 1700ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் தமிழிலும், சிங்களத்திலும் கத்தோலிக்க மறை சார்ந்த நூல்கள் எம்மிடம் உண்டு என்று கத்தோலிக்கர் பெருமையுடன் தலைநிமிர்ந்து சொல்லுமளவுக்கு பெரும் உதவியாக இருந்தது.[4]

தமது பணியின் போது தமது இலக்கினை மட்டுமன்று எங்கெல்லாம் கத்தோலிக்கர் இருந்தார்களோ அங்கெல்லாம் தாமாக சென்று தரிசித்து ஊக்கமூட்டி விசுவாசத்திலும், ஆன்மீகத்திலும் உறுதியளித்து அங்கங்கே மூப்பர்களையும் நியமித்து விட்டார். காரணம் தமது பிரசன்னம் இல்லாதபோது இம்மூப்பர்களே குருக்களுக்கு பதிலாக முன்னின்று ஞாயிறு, திருநாட்களில் மக்களை ஒன்றுகூட்டி பூசைத்தியானங்கள் வாசிப்பதும் தியானிப்பதுமான பணிகளில் ஈடுபட்டனர். ஆகவே குருக்கள் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் குருக்களின் பிரசன்னம் அடிக்கடி இல்லாதபோதும்கூட மக்கள் ஓர் கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ இம்மூப்பர்கள் உதவி புரிந்தனர்.

மொத்தத்தில் இத்தகைய முன்மதியுடன், எதிர்காலத் தேவைகளையுணர்ந்து அன்றே செயற்பட்டதனால் அச் செயற்பாடுகளின் பிரதிபலிப்பானது இன்னும் காணப்படுகின்றது. இதனால் இவர் ஒவ்வொரு குருவுக்கும் ஒரு முன்மாதிரியாக உள்ளார்.

## தாழ்மையான பண்பு

ஆரம்ப காலத்திலிருந்தே ஜோசவ் வாஸ் அடிகளாரிடம் காணப்பட்ட மேலான பண்புகளில் இதுவும் ஒன்று. " தான் நல்லதென நினைப்பதைவிட கடவுள் எதனை, எப்படி, எங்கே செய்ய வேண்டுமென குறிப்பிடுகின்றாரோ அதனை செய்வதே சிறந்தது" என்பதற்கிணங்க தமது குருத்துவ அழைப்பிற்குள்ளே தமது பணி எங்கே, யாருக்குத் தேவைப்படுகின்றது என்ற இன்னுமோர் இறை அழைப்புக்கு செவிசாய்த்ததுடன் அதற்கு முற்றிலும் தாழ்மையாக பதில் கொடுத்தார்.

4. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.99

இலங்கைக்கு செல்லும் நோக்குடனிருந்தபோது கோவா (Goa) பட்டணத்துக்கு வருகை தந்த இரு சந்நியாசிமார் (Friars) போர்த்துகேய மொழியிலிருந்து சுதேச மொழிக்கு மொழிமாற்றம் செய்யக்கூடிய குருவானவரைத் தேடியபோது பலகுருக்களுக்கு மேலாளராக பணிபுரிந்தாலும் இதுவும் ஒரு இறை பணியென மிகத் தாழ்மையான மனதுடன் மொழிபெயர்ப்புப் பணியிலே ஆர்வமுடன் ஈடுபட்டார்.[5]

தான் எவ்வாறுதான் படித்திருந்தாலும் அடுத்தவரை, தமக்கு கீழே பணியாற்றுபவர்களையும் ஊக்கப்படுத்தி முன்னேற்றுமளவுக்கு தாழ்மையான பண்பு கொண்டிருந்தார். இதன் வெளிப்பாடாகவே தமக்கு கீழ் பணிபுரிந்த யக்கோமே கொண்சால்வே (Jacome Gonșalvez) அடிகளாரை இலங்கையின் சுதேச மொழிகளை பயின்று அவற்றிலே எழுத் தாக்கம் புரியும்படி உற்சாகப்படுத்தி துணை நின்றது காணப்படுகின்றது. தமது புகழ்ச்சியை அல்ல மாறாக அனைத்து திறமைகளும் இறை புகழ்ச்சிக்கே என்ற நோக்கோடு பணியாற்றினார்.

**தான் நல்லதென நினைப்பதைவிட கடவுள் எதனை, எப்படி, எங்கே செய்ய வேண்டுமென குறிப்பிடுகின்றாரோ அதனை செய்வதே சிறந்தது**

தமது உணவுக்காகவும், மற்றும் ஏழைகளுக்கு, நோயாளருக்கு, உணவளிப்பதற்காகவுமென்று தானே வீடு வீடாய் சென்று பிச்சையெடுக்கவும் தயங்கவில்லை. குறிப்பாக கண்டியில் தொற்றுநோய் (அம்மை நோய்) பரவிய போதும் யார் யார் எந்த இனம் எந்த மதம் என்று பாராமல் பணி புரிந்ததன் மூலமாகவும், இறந்தோரை உரிய மரியாதையுடன் உரிய முறையில் அடக்கம் பண்ணியதன் மூலமும் கிறிஸ்தவ பண்புகளில் ஒன்றான தாழ்மை என்ற பண்பினை தமது வாழ்விலேயே காட்டினார்.

தான் ஒரு பிராமண குடும்பத்தைச் சார்ந்தவர், நன்கு படித்தவர், திருச்சபையின் உயர் பதவியில் உள்ளவர், அந்தஸ்தில் உயர்ந்தவர் என்பதை நன்கு அறிந்திருந்தாலும் இறைபணிக்கு முன்னால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது மிகத் தாழ்மையுடன் தான் ஒரு கத்தோலிக்கன் என்ற பெரிய வட்டத்தினுள் நின்று கொண்டு மனிதப்பிறவிகளுக்கே தமது பணியென்று செயற்பட்டதன் மூலமும் இவரது தாழ்மையான பண்புகள் புலப்படுகின்றன.

[5]. Zeleski L.M. "The Apostle of Ceylon" St. Joseph's Cath. press. Jaffna p.15

துணிகரமான முன்னெடுப்பு எனும்போது முத்திபேறு பெற்ற ஜோசவ் வாஸ் அடிகளார் தமது வாழ்வில் பல தடவைகளில் "என் பொருட்டும் நற் செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்" (மாற்கு 8:35) என்ற தேவ வார்த்தையை நம்பியவராக உயிராபத்துக்கள் பலவற்றையும் சந்திக்க தயாராக இருந்தார்.

இலங்கைத் தீவு நோக்கிய தமது பயணத்தில் தம்மோடு இணைந்து கொண்டவர்கள் இடையில் விலகிவிட்டாலும் ஜோண் என்ற இளைஞனின் தோழமையில் தொடர்ந்தும் முன்னேறிச் சென்றவருக்கு திருவான்கூர் (Trovencore) நகரிலிருந்த இயேசு சபைக் குருக்களின் வரவேற்பு, உபசரிப்பு, ஆலோசனைகள் அனைத்தும் அவர் தமது பயணத்திலே உருமறைப்பு (disguise) செய்து கொண்டு இலங்கைத் தீவிற்குள் நுழையும் துணிகரமான முடிவெடுக்க காரணமாயமைந்தது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவிலிருந்து குருக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் மீண்டும் அங்கே சென்று பணியாற்ற எந்தக் குருவும் தயங்கிக் கொண்டிருந்த வேளையிலே, மக்களின் அணைந்து போகின்ற விசுவாச விளக்கினை மட்டும் கண்முன் கொண்டு: வழிபாடுகள், திருவருட்சாதனங்கள் மரணச் சடங்குகள் அனைத்துமே சீர்திருத்த சபை நடைமுறையிலே நடத்தப்பட வேண்டும் என்ற சட்டம், நாட்டில் எந்த ஒரு கத்தோலிக்க குருவும் அனுமதிக்கப்பட மாட்டார், அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டால் அவருக்கு மட்டுமல்ல மாறாக அவருக்கு தஞ்சம் கொடுத்தவர்களுமே மரண தண்டனைக்குரிய குற்றவாளிகள் என்ற சட்டம், அனைத்தும் நடை முறையிலிருந்ததை அறிந்திருந்தும் உயிராபத்துக் கள் மத்தியிலும் தனது முடிவிலே மாற்றமின்றி முன் சென்றார்: செயலிலும் காட்டினார். தாம் ஒரு கத்தோலிக்க குரு என்று கத்தோலிக்கருக்கு அடையாளம் காட்டுவதற்காகவே தனது கழுத்திலே செபமாலை அணிந்திருந்தார். பிச்சை எடுக்கும் போதெல்லாம் சிலுவை அடையாளம் வரைந்து கொள்வார்.[13] இவற்றையெல்லாம் தான் ஒரு கத்தோலிக்கர் என்று அடையாளம் காட்டுவதற்காக மட்டுமன்றி இவற்றைக் காணும்போது மக்களின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை (Facial expression) கொண்டு கத்தோலிக்கரை இனம் காணுவதற்கும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்துப் படையினரிடமிருந்து தப்பி கண்டி இராட்சியத்திற்கு சென்ற போது அங்கே அவர் ஒரு போர்த்துக்கேய உளவாளி

13. Zeleski L.M. "The Apostle of Ceylon" St. Joseph's Cath. press. Jaffna 1991 p.24

## எடுத்துக் காட்டான புனித வாழ்வு

ஜோசவ் வாஸ் அடிகளாரிடம் தன்னம்பிக்கை இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைபராமரிப்பிலே அதீத நம்பிக்கை கொண்டவராக செயற்பட்ட அதே வேளை தாம் நம்பியிருந்த இறைவனின் பராமரிப்பு தமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் காணப்பட்டதை இவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை எஸ். ஜீ. பெரேரா என்ற அருள்தந்தை தமது புத்தகத்திலே இவரது வாழ்வின் சில பகுதிகளை மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றார்.

> தன்னம்பிக்கை இருந்தாலும் எல்லா வற்றிற்கும் மேலாக இறைபராமரிப்பிலே அதீத நம்பிக்கை கொண்டவராக செயற்பட்ட அதே வேளை தாம் நம்பி யிருந்த இறைவனின் பராமரிப்பு தமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் காணப்பட்டதை இவர் நன்கு உணர்ந்திருந்தார்

"பயணத்துணையாக வந்தவர்களில் இரு குருக்கள் பாதிவழியில் விலகிட ஜோசவ் வாஸ் அடிகளும் சீடன் ஜோண் என்பவரும் உரு மறைப்பு செய்து கொண்டு ஏழைக்கூலி யாட்களாக கொழும்பு துறைமுகம் செல்ல அனுமதி பெற்றாலும், கத்தோலிக்கக் குரு மாறு வேடத்தில் இலங்கைத்தீவுக்கு வருகிறார் என்ற செய்தியறிந்த ஒல்லாந்துப் படையினரின் கெடு பிடிகள் அதிகமாகவே கொழும்புப் பயணம் தடைப் பட்டது. சில நாட்களின் பின் யாழ் துறைமுகம் செல்வதற்கு அனுமதி கிடைத்தது. (குருவானவர் வேற்றுருவில் வருகின்றார் என கொழும்பிலே எதிர்பார்க்கப்பட்டது போல இங்கு பெரிதான எதிர்பார்ப்புக்கள் குறைவாகவே காணப்பட்டன) பயணத்தின்போது புயலில் சிக்குண்ட கப்பல் மன்னார் கரையினை அடைந்தபோது உடல் சோர்வுற்ற நிலையில் பட்டினியிலே வலுவின்றி காணப்பட்டதால் ஜோசவ் வாஸ் அடிகளாரையும் சீடனையும் அங்கேயே விட்டுவிட்டு கப்பல் புறப்பட்டுச் சென்றுவிட்டது.[9]

மக்களிடம் பிச்சையெடுத்து உண்டு தெம்படைந்த பின் யாழ்ப்பாணம் செல்லவிருந்த படகிலேறி பயணமானார். இப்பயணம் இலங்கையின் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு செல்வதாக இருந்ததால் எந்தவிதமான தொல்லையுமின்றி தொந்தரவுமின்றி தனது இலக்கினை அடைந்து விட்டார்.

---

9. Fr. perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecaries co., ltd colombo, p40

இப்பயணத்திலே குருக்கள் குழு ஒன்று வருவதைவிட தனியொருவர் வருவதற்கு மிக இலகுவாக இருந்தது. கொழும்பில் கெடுபிடிகள் அதிகம் என்பதால் பயணம் கைவிடப்பட்டு யாழ்ப்பாணத் துறைமுகத்துக்கு மாற்றப்பட்டது. அதிலும் சிலவேளை தொந்தரவுகள் நிகழலாம் என்பதனாலோ என்னவோ அவரது பயணம் மன்னாரில் முடிவுற்று மீண்டும் தொந்தரவு ஏதுமின்றி யாழ்ப்பாணம் வந்தடைந்தார் ஜோசவ் வாஸ் அடிகளார்.[10]

ஜோசவ் வாஸ் அடிகளார் நாளில் முக்கியமாக அதிக நேரத்தினை செபத்திலே செலவளிப்பவராகக் காணப்பட்டார். செபத்தின் மூலமே தமது பணிக்கு சக்தியினைப் பெற்றுக் கொள்பவராகக் காணப்படடதுடன் தனக்கு கஷ்டங்கள், கவலைகள், தாங்க முடியாத சோதனைகள் வரும் போதெல்லாம் இறைவனிடமே அவற்றை கூறி ஆறுதல் அடைபவராக காணப்பட்டார்.[11]

ஓய்வு நேரங்களில் மக்களுக்கு செபங்கள் சொல்லித்தருவதிலும் கிறிஸ்தவ ஒழுக்கம், திருச்சபையின் படிப்பினைகள் போன்றவற்றைச் சொல்லிக் கொடுப்பதிலும் சலிப்பின்றிச் செயற்பட்டார். "எனது விருப்ப மன்று இறைவிருப்பமே மேலானது, இறைவன் எதை, எங்கு எப்படி செய்யக் கட்டளை யிடுகின்றாரோ அதனை அவ்வாறு செய்வது தான் சிறந்தது. மனிதர் தவறிப்போகலாம், ஏன் ஞானிகள் கூட தவறலாம் ஆனால் கடவுளுக்கு அஞ்சி நடக்கின்ற மனிதன் தவறு வதே இல்லை".[12] என்று இறைவிருப்பத்தை தமது வாழ்வில் அறிந்து தெரிந்து அதனை வாழ, கிறிஸ்துவை அனுபவித்து வாழ்ந் ததுடன் தாம் அனுபவித்த கிறிஸ்துவை தமது புனித வாழ்வினால் மக்களுக்கும் கொடுத்தார்.

> மனிதர் தவறிப் போகலாம், ஏன் ஞானிகள் கூட தவறலாம் ஆனால் கடவுளுக்கு அஞ்சி நடக்கின்ற மனிதன் தவறுவதே இல்லை.

---

10. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.103

11. Fr. perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecaries co., ltd Colombo, p39

12. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.102

## இறைபணியில் துணிகரமான முன்னெடுப்பு

ஜோசவ் வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும், தமது சொந்த ஓய்வினையும் இலகு வாழ்வினையும் பாராது தம்மை மறைப்பணிக்கு அழைத்தவரின் மந்தைகளின் விசுவாசத்தினை பாதுகாக்கும் ஒரே ஒரு நோக்கத்தினை கருத்தில் கொண்டு முற்றிலுமான அர்ப்பணிப்புடன் கூடிய ஒன்றாகக் காணப்பட்டது.[6]

வெவ்வேறு இனத்தவருக்கும், சாதியினருக்குமிடையில் இவரது பணி அமைந்திருந்த போதிலும் கூட அனைவரையுமே சமரீதியில் நோக்குபவராகக் காணப்பட்டார். உதாரணமாக சாதிக்கொரு கோயில் கட்ட அனுமதி கொடுத்திருந்தாலும் உரிய முறையில் அவர்களுக்கு ஆலோசனையும் அறிவுரையும் கூறி ஒன்றாகக் கூடுகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் சாதிவேற்றுமைக்கே இடமில்லாதவாறு வழிநடத்தினார். இவ்வாறான சாதிவேற்றுமையற்ற கத்தோலிக்க நடைமுறையினை பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து வந்த குருக்கள் கண்டு ஆச்சரியப்பட்டனர்.[7]

மக்களின் மனதறிந்தவராக மனம் மாறி வந்த்வர்களை திடீர் மாற்றத்துக்கு வற்புறுத்தாமல் அவர்களது மூதாதையரின் வழக்கங்களை (சிலசில இந்து சம்பிரதாய முறைகளை) கிறிஸ்தவ மயப்படுத்தி அவற்றைப் பின்பற்ற அனுமதி கொடுத்தார். உதாரணமாக ஊர்வலம், பவனி, ஆடல் பாடல்கள், தீர்த்தம் தெளித்தல் போன்றவற்றை கத்தோலிக்க நடைமுறைக்கேற்றவாறு செபங்களையும் அமைத்துக் கொடுத்தார்.[8]

இலங்கையிலே தமது பணியில் நன்கு காலூன்றி வழியமைத்த பின்னரே தமக்கு உதவிக்கென தென்னிந்தியாவிலிருந்து குருக்களை அழைத்தார் அதுவும் அவர்களுக்கும் இங்குள்ள நிலை பற்றி நன்றாக எடுத்துக் கூறி, அர்ப்பணிப்புடன், முழுநேரப்பணிக்கு, இங்குள்ள கஷ்டங்களை அனுபவிக்க முழுமனம் கொண்டிருக்கின்ற, இங்கு வந்தபின் மீண்டும் தாயகம் செல்லும் நோக்கமற்ற குருக்களே இங்கு எனக்கு தேவை என்று தெளிவாக குறிப்பிட்டு அழைப்பு விடுத்திருந்தார்.

---

6. Fr. Perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecaries co., Ltd colombo, p60

7. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.106

8 cf. Ibid p.106

என சந்தேகிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர் தமது நோக்கிலும், பணியிலும், சற்றும் கூட தயங்காமல், பின்வாங்காமல், துணிவுடன், நேர்மையுடன் செயற் பட்டார். அதனைத் தொடர்ந்து 9 ஆண்டுகள் நாடுமுழுவதும் தன்னந் தனியாளாக நின்று பல மறைப் பயணங்கள் மூலம் நாட்டின் வடக்கையும் தெற்கையும் இணைக்குமளவுக்கு தமது மந்தையைப் பற்றி நன்கறிந்திருந்தவராக[14] மனவுறு தியுடன் ஆழமான பணியிலே தம்மை ஈடுபடுத்தி செயற்பட்டார்.

1697ல் கண்டிப் பகுதியில் பரவிய ஒருவகை அம்மை நோயானது பல உயிர்களைப் பலிகொண்டதை அறிந்த மக்கள் தமது இரத்த உறவுகள் நோய்க் குள்ளான போது அவர்களை வீட்டிலேயே விட்டு விட்டு ஓடிவிட்டனர். உயிருக்குப் பயந்த அரசன் கூட தனது மாளிகையை விட்டு ஓடிவிட்டான். இதனை கண்ட ஜோசவ் வாஸ் அடிகளார் தான் உயிருக்காக போராடிக்கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் ஒரு மூதாட்டி கஞ்சி கொடுத்து காப்பாற்றியதை நினைவுகூர்ந்தார்.[15]

கிறிஸ்தவ அன்பின் ஆழத்தை வெளிக்காட்ட தனக்குள்ளே ஒரு இறை அழைப்பினை உணர்ந்தவராக எதறகும் சிந்திக்காமல், தயங்காமல் துணைக்கிருந்த கர்வாலோ என்ற குருவுடன் இணைந்து செயற்பாட்டில் இறங்கினார். ஆலயத் துக்கருகிலிருந்த நான்கு வீடுகளில் அனைத்து கைவிடப்பட்ட நோயாளரையும் கொணர்ந்து பராமரிக்கத் தொடங்கினார். நோயாளரைக் கழுவுதல், துடைத்தல், நாட்டுவைத்தியம் செய்தல் அவர்களது உணவுக்காக பிச்சையெடுத்தல், சமைத்தல் இவையே நாளாந்த கடமைகளாக காணப்பட்டன.

தமது சொந்தங்களோ, நாட்டினரோ அல்லாத அந்நியரால், அதுவம் தசையும் இரத்தமும் கொண்ட சாதாரண மனிதக் குருக்களால் இந்த அளவுக்கு அன்பு காட்ட முடிகின்றதா என கவனிக்கப்பட்டவர்களின் கண்களில் கண்ணீரை வர வழைக்கும் அளவுக்கு இந்த குருக்களின் துணிகரமான பணி அமைந்திருந்தது.[16] நாட்டில் எந்தவொரு மத அமைப்பும் முன்வராத நிலையில் பிறருக்கு அன்பு காட்டுதல் என்ற கிறிஸ்தவ கோட்பாடுகளின் அடிப்படையில் சாதி மத வேற்றுமை யின்றி மிகத்துணிவுடன் காணப்பட்ட இப்பணியானது உண்மையில் அன்றைய மக்களின், ஏன் அரசனின் மனதைக் கூட கவர்ந்திருந்தது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

---

14. Fr. Perera S.G. " Historical Sketches" Catholic book depot, Norris Rd. Colombo p.101

15. Fr. Perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecaries co., ltd Colombo, p136

16. Fr. Perera S.G. "Life of the Ven. Fr. Joseph Vaz" Apothecaries co., ltd Colombo, p138

## முடிவாக

அருளாளர் ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறை அறிவிப்பு முறையினை ஒட்டு மொத்தமாக எடுத்து நோக்குமிடத்து இவரது மறைப்பணி ஒரு குறுகிய நோக்கம் கொண்டதாக இல்லாமல் பரந்துபட்ட தூரநோக்குடன் நீண்டகால நன்மையை கருத்தில் கொண்ட ஒன்றாகவே காணப்பட்டது. பணியாற்றும் காலத்திலே தனிமை, வெறுமை, வறுமை இவையாவற்றிலும் இறைவனின் பராமரிப்பு தம்மோடு இருந்ததை உணர்ந்தவராக தமது முன்னோடிகளைவிட பல புதிய முறைகளை கையாண்டும், மக்களின் வாழ்வுக்கும், சூழலுக்கும் ஏற்றவாறு பலவற்றை அறிமுகப் படுத்தியும், மாற்றியமைத்தும் குறிப்பாக பண்பாட்டு மயமாக்கல் மூலமும் தமது பணியினை முன்னெடுத்துச் சென்றார்.

துன்பங்களில் துவண்டு விடவில்லை, சவால்களில் தப்பி ஓட முயல வில்லை செபத்திலே நிலைத்திருந்து வாழ்விலே இறைவனுக்கு சான்றுபகர உயிராபத் துக்களையும் சந்திக்க தயாராக இருந்த நிலையில் மிகவும் துணிகரமாக தமது பணியினை முன்னெடுத்தார். தமக்கு கீழே இருப்பவர்களை மதித்து அவர்களது ஆற்றலை இனம் கண்டு வளர்த்துவிடுவதன் மூலம் பரந்துபட்ட நன்மையை சமூகத்துக்கு கொடுக்கலாம் என்பதை உணர்ந்து செயற்பாட்டிலே நிரூபித்து காட்டினார். தாழ்மையும், ஏழ்மையும், அன்பும் பணியும் கிறிஸ்தவ பண்புகள் என்பதை வாழ்வின் பல்வேறு நிலைகளில், பல்வேறு இடங்களில் வாழ்ந்து காட்டினார். இவ்வாறாக மக்களுடனான தனிப்பட்ட (Personal) அணுகு முறைகளும் இறையுறவின் ஒன்றிப்பும், முழுமையான அர்ப்பணிப்பும் பணியிலே அவர் கொண்டிருந்த தூரநோக்கு (நீண்டகால நன்மை) பார்வையும் அவரது பணியிலே மாற்றத்தையும் வெற்றியையும் கொணர்ந்ததுடன் இவருக்கு பின்னர் இந்நாட்டில் இறைபணியிலே ஈடுபட்டிருந்தவர்கட்கு இது ஒரு முன்மாதிரியாகவும் அமைந்திருந்தது.

**துணைநின்ற நூல்கள்**


1. Fr. S.G. Perera, 'Historical Sketches' (Ceylon Church History) Catholic book Depot. Norris Road Colombo.
2. Fr. S.G. Perera "Life of the Venerabte Fr. Joseph Vaz aposti of Ceylon" Apothecaries Co., ltd. Colombo.
3. Arch Bishop Zeleski L.M, "The Apostle of Ceylon, Fr. Joseph Vaz" Reprinted by St. Joseph's Catholic Press Jaffna 1991.
4. சுவாமி J.E. ஜெயசீலன் "யாழ் திருச்சபை வரலாறு" வளன் ஆச்சிரமம் 47, 6ம் குறுக்குத் தெரு (102 பிரதான வீதி) யாழ்ப்பாணம்.
5. சுவாமி ம. பாவிலுப்பிள்ளை மா.ம.தி. "ஜோசவ் வாஸ் முனிவரின் சரிதை" புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்

# திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பும் மற்றைய மதங்களும்

அருட்சகோ. பாலதாஸ் பிரயன்

## முன்னுரை:

"முதல் ஆயிரம் ஆண்டுகளில் ஐரோப்பிய மண்ணிலும், இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளில் அமெரிக்க, ஆப்பிரிக்க மண்ணிலும், இயேசுவின் சிலுவை ஊன்றப்பட்டது போல, மூன்றாவது கிறிஸ்தவ ஆயிரமாண்டில் இப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்த ஆசியாக் கண்டத்தில் மிகப்பெரிய விசுவாச அறுவடை நடைபெறும் என்று நாம் செபிக்கலாம்". என்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஆசியத் திருச்சபை என்னும் மடலில் குறிப்பிடுகின்றார். ஆசியப்பண்பாடு, அரசியல், பொருளாதார, சமய, சமூக, ஆன்மீகச் சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து எனனும் நற்செய்தியை எவ்வாறு அறிவிப்பது என்பதே இந்த மடலின் ஒவ்வொரு பக்கமும் விளக்க, தெளிவாக்க முற்படுகின்றது.

உயிர்த்த இயேசுவின் அன்பான கட்டளையை சீடர்கள் சிரமேற் கொண்டு செயற்பட்டமை நாம் அறிந்த நற்செய்தி நூல்கள் கூறும் ஒப்பற்ற சான்று "விண்ணுலகிலும், மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப் பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும் படி கற்பியுங்கள். "இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" (மத் 28: 18-20).

எனவே நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது திருச்சபையின் ஒப்பற்ற பணி "நற்செய்தி அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" என்று தூய பவுல் கூறுகின்றார். ஒவ்வொரு திருச்சபை அங்கத்தவனும் நற்செய்தி அறிவிப்புப் பணியை செவ்வனே செய்ய அழைக்கப்படுகின்றான்.

அத்தோடு ஏனைய மதங்களையும் அவரவர் உரிமையுடனும், கடமையுடனும், சமய ஒழுங்குகளுடனும் நாம் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அனைவரும் இறைத்தந்தையின் அன்புப் பிள்ளைகள் அனைவரின் மீட்புக்காகவுமே இயேசுக் கிறிஸ்து சிலுவைப் பீடமேறினார்.

## நற்செய்தி என்றால் எது?

நற்செய்தி அறிவிப்புப் பணியில் இந்த வினா மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது வரலாற்றின் பரிணாம வளர்ச்சியில் தவறான எண்ணத்தை, சிந்தனையைக் கொடுத்துள்ளது. நற்செய்தி அறிவிப்பென்றால் வெறும் மக்களைப் பெருக்கிக் கொள்வதைக் குறிக்கின்றதா? அல்லது பலப்பல நவீன யுக்திகளைப் பயன்படுத்தி கிறிஸ்துவைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதுதான் நற்செய்தி அறிவிப்பு என்றால் அது உண்மையில் தனது இலக்கை அடையவில்லை என்றாகிவிடும். எனவே தான் வேதாகமப் பின்னணியில் நற்செய்தி அறிவிப்பை நோக்குவது பொருத்தமானது.

## தந்தையால் மகன் அனுப்பப்படல்

மனுக்குலத்தை மீட்கத் தந்தையாம் கடவுள் தம் ஒரே பேறான மகனை உலகிற்கு அனுப்புகின்றார். இருள், அலகை ஆகியவற்றின் வலிமையிலிருந்து நம்மைத் தம் மகன் வழியாக விடுவிக்கவும், அவரில் உலகைத் தம்மோடு ஒப்புரவாக்கவுமே அவர் இவ்வாறு செய்தார். பாவம் தவிர, வறியவர்களும் ஏழைகளுமான நமது முழு மனித இயல்பையுமே உண்மையிலேயே இயேசு ஏற்றுக்கொண்டார். ஏனெனில் "தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகிற்கு அனுப்பப்பட்ட" (யோவான் 10:36) கிறிஸ்து தம்மைக் குறித்து கூறும்போது; "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19) மேலும் அவர், "இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" (லூக் 19:10) என்கின்றார். அனுப்பப்பட்ட மகன் எதைப் போதித்தாரோ, அவரில் எது நிறைவு பெற்றதோ அதையெல்லாம் எருசலேம் தொடங்கி (லூக் 24:47) உலகின் கடையெல்லைவரை (தி.ப. 1:8) பறைசாற்றப்பட்டு பரப்பப்பட வேண்டும்.

## கிறிஸ்துவால் திருச்சபை அனுப்பப்படல்

மாற்கு நற்செய்தி 3:13-15 மிகவும் அழகாகக் கூறுகின்றது. "தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார்.........தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும்.................. அவர் பன்னிருவரை நியமித்தார்". தந்தையால் தாம் அனுப்பப்பட்டது போலவே அவரும் திருத்தூதர்களை உலக முழுவதிற்கும் அனுப்பினார்; (யோவான் 20:21) "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற் செய்தியை பறைசாற்றுங்கள் நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர் (மாற் 16:15-16) எனவே கிறிஸ்து தரும் நம்பிக்கையை, நிறைவாழ்வை, அவரது உண்மையைப் பரப்பும் கடமையானது திருச்சபையின் பணியாகின்றது. கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தூய ஆவியின் அருளால், அன்பால் உந்தப்பட்டு, வாழ்வின் முன்மாதிரிகையாலும், உதாரணங்களாலும், பறைசாற்றலாலும், எல்லா மக்களுக்கும் எடுத்துக்காட்டாக் திருச்சபை துலங்கும் போது அங்கே திருச்சபை அனுப்பப்பட்டதன் நோக்கம் சிறிது நிறைவு பெறுகின்றது. உண்மையில் கிறிஸ்துவின் துன்பப் பாடுகளை தங்கள் உடலில் சுமந்து உயிர்ப்பின் செய்தியை வீரத்துடன் பறைசாற்றும்போது நற்செய்தி அறிவிப்பு முழுமை பெறுகின்றது.

> **"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்"** (மாற் 16:15-16)

## கடவுளின் மக்கள் அனைவரும் நற்செய்தி அறிவிக்க கடமைப்பட்டுள்ளனர்

நம்பிக்கை கொண்டோர் அனைவரும் கிறிஸ்துவின் உடன் உறுப்பினர். நற்செய்தி அறிவிக்கும் கடமை இவர்களின் தலையாய கடமையாகின்றது. கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்ப இவர்கள் முழுமுச்சுடன் செயல்பட அழைக்கப்பட்டுள்ளார்கள். திருச்சபையின் பிள்ளைகள் அனைவரும் உலகின் மேல் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து, கிறிஸ்தவ வாழ்வை ஆழமாக வாழ்வதன் மூலம் நற்செய்தியை அறிவிக்க கடமைப்பட்டுள்ளனர். "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள்" (மத் 5: 13), "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (மத் 5:14) என்று கூறி இயேசு நம்மை மேலான வாழ்வுக்கு, சாட்சியத்திற்கு அறைகூவல் விடுப்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

## சமயச் சுதந்திரம் முக்கியமானது

சமயச் சுதந்திரம் என்பது இறைவெளிப்பாட்டின் அடிப்படையிலிருந்து எழுகின்றது. இது உண்மையில் மனிதனின் மாண்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு விடயம். சமுதாயத்தில் நிலவ வேண்டிய சமயச் சுதந்திரம் கிறிஸ்தவ நம்பிக்கைச் சுதந்திரத்தோடு இசைவாகச் செயல்பட வேண்டும். எனவே விரும்பாத எவரையும் கிறிஸ்தவ நம்பிக்கையைக் கைக்கொள்ளக் கட்டாயப்படுத்தக் கூடாது. நம்பி ஏற்கப்படும் செயல் தம் இயல்பிலேயே சுதந்திரமானதாகும். எனவே சமயக் காரியங்களில் மனிதரிடமிருந்து வரும் எந்தக் கட்டாயத் திணிப்பும் தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறாக, மனிதர் விரும்பி எளிதாய் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு, அழைக்கப்படவும், அதைத் தாமாகவே விரும்பித் தழுவவும், அந்த நம்பிக்கையை தம் வாழ்க்கை முழுவதிலும் கடைப்பிடித்து செயல்முறையில் அதை வெளிப் படுத்தவும் உதவக்கூடிய சூழ்நிலையை உருவாக்கச் சமயச் சுதந்திரம் பெரிதும் முக்கியமானது.

## கிறிஸ்து செயல்பட்ட விதம்

இறைவன் மனிதனின் சுதந்திரத்தை மதிக்கின்றார். மனிதனைப் படைத்த இறைவன் அவனது மாண்பையும் மதிக்கின்றார். இந்த உண்மை இயேசுக் கிறிஸ்துவிலே துல்லியமாகத் தெரிகின்றது. அவர் கனிவும், மனத் தாழ்மையும் உள்ளவராகத் தம் சீடர்களை அழைப்பதில் பொறுமையைக் கையாண்டார் (மத் 11:28-30)

> "சீசருக்கு உரியதை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்" (மத் 22:21)

சீசருக்கு வரி செலுத்த வேண்டுமென்று கட்டளையிட்டு அரசின் அதிகாரத்தை அதன் உரிமையை மதித்தார். ஆனால் "சீசருக்கு உரியதை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்" (மத் 22:21) என்று கூறி கடவுளின் மேலான உரிமையை மதிக்க வேண்டும் என்கின்றார். அவர் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். எனினும் உண்மைக்கு முர ணாகப் பேசியவர்கள் மேல் அவர் கட்டாயமாக அதைத் திணிக்க விரும்பவில்லை. நிலை வாழ்வுக்கு அனைவரையும் அழைத்தார். அன்பால் கட்டப்பட விருப்பம் கொண்டார். இவ்வன்பால்தான் சிலுவையில் உயர்த்தப்பட்ட கிறிஸ்து தம்மிடம் எல்லா மனிதரையும் ஈர்க்கின்றார்.

## மதமாற்றம்

06-11-1999 அன்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இந்தியாவிற்கு வரு முன்னரே பலர், இவர் "மதம் மாற்றம் செய்யவே" இந்தியா வருகிறார் என்று குற்றம் சாட்டினர். ஆனால் மகாத்மா காந்தியின் சமாதியை தரிசித்து அங்கே வைக்கப்பட்டிருந்த விருந்தினர் ஏட்டிலே திருத்தந்தை பின்வருமாறு எழுதினார், "பல்வகை பண்பாடுகள், பல்வகை கலாசாரங்கள் ஆகியவற்றை ஒதுக்கித் தள்ளும் எந்த நாடும் வாழத் தகுதியற்றது" நற்செய்தி அறிவிப்பு அவசியம் "வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்" அறிவிக்க வேண்டும் ஆனால் அதைப் பிழையாகப் புரிந்து மதமாற்றம் என்று கூறுவது கவலைக்குரிய விடயம்.

எம் நாட்டிலே கிட்டத்தட்ட 129 கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்கள தாக்கப்பட்டுள்ளன அல்லது தகர்த்தெறியப்பட்டுள்ளன. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்கின்றார்கள் என்பதே இன்று உள்ள குற்றச்சாட்டு. அதற்கான "மதமாற்றத் தடைச்சட்ட" ஒழுங்குகளும் இன்றைய அரசியலில் முக்கிய இடம் பிடித்துவிட்டது.

உண்மையில் தெட்டத்தெளிவாக அறிந்து கொண்டால் கிறிஸ்தவ அறிவிப்பு என்பது வேறு மதமாற்றம் என்பது வேறு.

## சகோதரத்துவம்

அனைத்து மத மக்களும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். இவர்களில் பலரை நாம் உடன்பிறப்புக்களாக நினைத்து, அவர்களை நடத்த மறந்தோம் என்றால் கடவுளை அனைத்து மக்களின் தந்தை என்று நாம் அழைக்க முடியாது. "அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை" (1 யோவான் 4:8) அன்பினால் கட்டப்பட்டவர்களே கடவுளை நன்கு அறிந்துள்ளார்கள். அன்பில்லாதவர்கள் கடவுளை அறிவதில்லை.

எனவே மனிதரை அவரவர் மாண்போடு மதிக்க வேண்டும் அநீதிப் பார்வையை விடுத்து அன்பு வழியில் மனிதரை அரவணைக்க வேண்டும். இனம், நிறம், சமயம், வாழ்க்கை நிலை ஆகியவற்றின் அடிப்படையில் எம்மனிதரையும் பிரித்து வேறுபடுத்துவதும், அவர்களை உடல், உளரீதியில் துன்புறுத்துவதும் கிறிஸ்துவிற்கு முரணான செயலாகும். சகோதரத்துவ உறவிலே கட்டப்பட்டு செயல் வடிவம் பெற்ற நல்மக்களாக மற்றவரை மதித்து வாழ அழைக்கப் படுகின்றோம்.

## முடிவாக

நற்செய்தி அறிவிப்பு என்பது அழைக்கப்பட்ட ஒவ்வொருவனின் தலையாய கடமையாகின்றது. நற்செய்தி அறிவிப்பானது இன்று, நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல மாறாக கிறிஸ்துவே அதை ஆரம்பித்து தானே நற்செய்தியாகின்றார். எனவே சீடர்களின் குறிப்பாக எம் எல்லோரினதும் கடமையாகவும், உரிமையாகவும் நற்செய்தி அறிவிப்பு திகழ்கின்றது.

அத்தோடு ஏனைய மதங்களின் உண்மைத்தன்மையையும், அவர்களின் விசுவாசத்தையும் நாம் மதிக்க வேண்டும். ஏனெனில் அனைவரும் இறைத்தந்தையின் பிள்ளைகள் அனைவரின் பாவத்திற்காகவும் தான் கிறிஸ்து சிலுவையில் மரித்தார்

மனித மாண்பை மதித்து, மனிதத்தை ஏற்றுக் கொண்டு வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிறிஸ்து என்னும் நற்செய்தியைப் பரப்புவது எம் தலையாய கடமையாகும்.

**துணைநின்ற நூல்கள்**

- திருவிவிலியம்
- இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு
- ஆசியத் திருச்சபை தாக்கங்களும் தடைகளும்
  ~ தொகுப்பு மதுரை ஆனந்த்
- Evangelii Nuntiandi - Pope Paul VI
- Ecclesia in Asia - Pope John Paul II

"கடவுளை மக்கள் அறியாத ஓர் இடம் பூமியில் இருக்கின்றது என்று நான் அறிவேனானால் நான் ஒருபோதும் இளைப்பாற முடியாது"

~புனித பிரான்சிஸ் சவேரியார்~

# கிறிஸ்துவின் உயிர்ப்பே நற்செய்திப் பணியின் உதயம்

அருள்திரு A. மகன் அலோசியஸ்

## முன்னுரை

"தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவா 20:21) என்ற இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தையின்படி திருச்சபை தன் இயல்பிலேயே அனுப்பப்பட்ட ஓர் இயக்கமாக செயல்பட்டு வருகின்றது என்பது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் ஆணித்தரமான முடிவாக உள்ளது. நற்செய்திப் பணியானது திருச்சபையின் முதன்மையானதும் தலையாயதுமான பணியாக இருக்கிறது. இப்பணி உலகனைத்திலும் எக்காலத்திலும் எல்லாச் சூழல்களிலும் நிகழ வேண்டிய தொன்றாகும். உலகின் கடையெல்லைவரை வாழும் எல்லா இனத்தவர்க்கும் இறை அன்பை எடுத்துக்காட்டி அவர்களோடு அதைப் பகிர்ந்து கொள்ள கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட திருச்சபையானது, தனது நற்செய்திப் பணியின் அளவு மிகப்பெரிது என்பதை உணர்கிறது. "இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 28:20) என்ற உயிர்த்த கிறிஸ்துவின் உயிருள்ள வார்த்தைகளில் கொண்ட நம்பிக்கையில் திருச்சபையானது தனது நற்செய்திப் பணியை வெற்றியுடன் ஆற்றி வருகின்றது. நற்செய்திப் பணிக்காகத் தன்னை உலகிற்குள் அனுப்பி வைத்த உயிர்த்த கிறிஸ்து தன்னோடு தொடர்ந்து வழிநடக்கிறார். தன்னை வலுப் படுத்துகிறார், உடனிருக்கிறார் என்ற புனித அனுபவத்தோடு திருச்சபையானது தனது நற்செய்திப் பயணத்தைத் தொடர்ந்தவண்ணமுள்ளது.

## கிறிஸ்துவின் நற்செய்திப் பணி

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்று நமதாண்டவர் கிறிஸ்து தமது நற்செய்திப் பணியை ஆரம்பித்தார். கிறிஸ்துவின் நற்செய்திப் பணி, குறிப்பாக அவரது மூன்று வருடப் பகிரங்கப் பணிவாழ்வில் அவர் போதித்தவை, ஆற்றிய அற்புதங்கள் அனைத்தும் மெசியா என்னும் உலக மீட்பரின் பிரசன்னத்தை உலகிற்கு வெளிப்படுத்துவனவாக அமைந்தன. தமது நற்செய்திப் பணியானது முழுமனித விடுதலையை நோக்கமாகக் கொண்டது என்பதை தம் வாழ்வால் தாம் தேர்ந்தெடுத்தவர்களுக்கு எடுத்துக்காட்டி அதன் மூலமாக அவர்களது எதிர்கால நற்செய்திப் பணியின் தாற்பரியத்தை உணர்த்தினார். அதேவேளை தமது பணியின் நிறைவில் தாம் எதிர்கொள்ளப்போகும் பாடுகளையும் மரணத்தையும் அந்த மரணத்தின் வழியாகத் தாம் அடையப் போகும் உயிர்ப்பென்னும் மாட்சியையும் அவ்வப்போது கிறிஸ்து தம் சீடர்களுக்கு முன்னறிவித்தார். ஆனால் கிறிஸ்து என்னும் மெசியாவின் பணியின் தன்மையை முழுமையாக புரிந்துகொள்ளத் தவறிய சீடர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பு வரை தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியின் தாற்பரியத்தையும் புரிந்துகொள்ளவில்லை. கிறிஸ்துவின் உயிர்ப்பிலேதான் மெசியாவின் பணியின் தன்மையை, மகத்துவத்தை சீடர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டார்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பானது அவரது பணிபற்றிய ஒரு புதிய பார்வையை சீடர்களுக்குக் கொடுத்தது. கிறிஸ்துவின் உயிர்ப்பினால் சீடர்கள் பெற்றுக்கொண்ட இந்தப் புதிய பார்வை அவர்களின் நற்செய்திப் பணிப் பயணத்தின் விடிவெள்ளியாக அமைந்தது. சமுதாயத்தின் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் கடந்து வியாபித்து நின்ற கிறிஸ்துவின் நற்செய்திப் பணியின் முழுப்பரிமாணத்தையும் அவரது உயிர்ப்பின் ஒளியில்தான் சீடர்களால் தெட்டத் தெளிவாக நோக்க முடிந்தது.

## கிறிஸ்துவே நற்செய்தி

கிறிஸ்துவின் இவ்வுலக நற்செய்திப் பணியில் கிறிஸ்துவே நற்செய்தியாளனாகத் திகழ்ந்தார். ஆனால் அவரது உயிர்ப்பின் பின்னர் அவரே நற்செய்தியாக மாறினார். தந்தையாகிய கடவுளின் திருவுளத்திற்கேற்ப கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளராக வந்த கிறிஸ்து அனைவரின் மீட்புக்காகத் தம்மையே ஈடாகக் கொடுத்தார். "இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை" (திப 4:12) என்ற மாபெரும் நற்செய்தி கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலமாய் எம்

எல்லோருடைய இதயங்களிலும் பதியப்பட்டது. கிறிஸ்து தமது மாட்சிமை மிகுந்த பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக மனுக்குலத்திற்குப் பெற்றுத்தந்த மாபெரும் மீட்பே எமக்குக் கொடுக்கப்பட்ட ஈடு இணையில்லா நற்செய்தி.

## "கிறிஸ்து உயிர்த்தார்" என்பதே நற்செய்தியின் கொடுமுடி

> "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக் கின்றேன். இன்று ஆண்டவ ராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக் கின்றார்" என்ற வானதூதர் களின் நற்செய்தியின் பெருமகிழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான் முழுமை பெறுகிறது.

கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் எமது நற்செய்தி வீண் என்ற புனித சின்னப்பரின் போதனையானது, நற்செய்தியின் அடிநாதம், அதன் கொடுமுடி கிறிஸ்துவின் உயிர்ப்பேயன்றி வேறில்லை என்பதை மிகத் தெளிவாக எமக்கு உணர்த்தி நிற்கின்றது. பாவத்தினால் மடிந்து போயிருந்த மனுக் குலத்திற்கு உயிர்ப்பிச்சை கொடுக்க கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு தேவையாகவிருந்தது. கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த மக்களுக்கு "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்" என்ற வானதூதர்களின் நற்செய்தியின் பெருமகிழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான் முழுமை பெறுகிறது. ஏனெனில் கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும்தான் தந்தையாகிய இறைவனுடன் மனுக்குலத்தை ஒப்புரவாக்கியது. ஆதாமின் கீழ்ப்படிவின்மையால் விளைந்த சாபத்தைப் போக்க கிறிஸ்துவின் கீழ்ப்படிவு அவசியமானது. அது ஒரு சாதாரண கீழ்ப்படிவாக இல்லாமல் சிலுவை மரணம் வரையான கீழ்ப்படிவாக இருந்தது. இதை சொல்லற்கரிய கீழ்ப்படிவுக்கு ஈடான மாட்சிமையாக இறைவன் அவரை இறந்தோரிடத்தில் நின்று உயிர்தெழச்செய்தார். ஆகவே கிறிஸ்துவின் உயிர்ப்பினால்தான் மனுக்குலம் வாழ்வைக் கண்டது. ஆயின் "கிறிஸ்து உயிர்த்தார்" என்பதே நற்செய்தியின் கொடுமுடி. இந்த நற்செய்தியின் கொடுமுடி கிறிஸ்து வெற்றி வீரனாய் உயிர்த்தெழுந்த அந்த நாளிலேயே வீறுகொண்டெழுந்தது திருச்சபையின் நற்செய்திப் பணியின் உதயத்திற்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு வழி சமைத்தது.

## ஆதித்திருச்சபையின் நற்செய்திப் பணி

ஆதித்திருச்சபையினரின் நற்செய்திப் பணியானது கிறிஸ்துவின் உயிர்ப்பினோடு ஆரம்பிக்கப்படுவதை நற்செய்திகளில் மிகத் தெளிவாக நாம் காண்கின்றோம். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்று உயிர்த்த கிறிஸ்து தாம் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர்களுக்கு பணித்து அவர்களை உலகிற்குள் அனுப்பி வைத்தார். மெசியா என்னும் கிறிஸ்து இந்த உலகிற்குத் தரவந்த முழு மனித விடுதலையை முழுமையாகப் புரிந்து கொள்ளத் தவறிய சீடர்கள் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் துவண்டு போயினர். கிறிஸ்து அளிக்கவிருந்த விடுதலையை ஓர் உலக அரசியல் விடுதலை என்றும் கிறிஸ்துவின் அரசுரிமையில் தாம் முக்கிய பங்காற்றலாம் என்ற கனவுடனும் வாழ்ந்த சீடர்களுக்கு கிறிஸ்துவின் மரணம் ஏமாற்றத்தையும் கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட அதே கதியே தங்களுக்கும் ஏற்படும் என்ற பீதியையும் கொடுத்ததில் வியப்பில்லை. தாம் மரணித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்ற கிறிஸ்துவின் போதனை சீடர்களின் மனங்களில் பதிந்திருந்தாலும் அதனை அவர்கள் முழுமையாக விசுவசிக்கவில்லை. ஆனால் கிறிஸ்து உயிர்த்தார் என்ற உண்மை அவர்கள் உள்ளங்களில் புதிய துணிவைக் கொடுத்தது. அதே துணிவோடு அவர்கள் தமது நற்செய்திப் பணியை முழு உத்வேகத்தோடு ஆரம்பித்தார்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பு வெறமனே நற்செய்திப் பணிக்கான துணிவை மட்டும் கொடுக்கவில்லை மாறாக தாம் ஆற்றப்போகும் நற்செய்திப் பணியின் தாற்பரியத்தை மிகத் தெளிவாக அவர்கள் புரிந்து கொண்டார்கள். தம்முடைய நற்செய்திப் பணியானது கிறிஸ்து ஆற்றிய அதே நற்செய்திப் பணியின் தொடர்ச்சி என்பதையும் உணர்ந்து கொண்டனர். வரலாற்று மனிதனான கிறிஸ்துவை ஆண்டவர் என்ற நிலைக்கு உயர்த்திய அவரது உயிர்ப்பே இந்தக் கணம்வரை நற்செய்திப் பணியின் உதயமும் ஊற்றும் சக்தியுமாக திகழ்கிறது.

## உயிர்த்த கிறிஸ்து எம்மோடு வழி நடக்கும் நற்செய்திப் பணியாளன்

எம்மாவுஸ் பயணத்தின் போது சீடர்கள் இருவர் பெற்றுக் கொண்ட உயிர்த்த கிறிஸ்துவின் அனுபவம் முழுத்திருச்சபையினதும் நற்செய்திப் பணியின் ஒரு மாபெரும் மைல்கல் என்று சொல்லலாம். நற்செய்திப் பணியில் ஈடுபட்டுள்ள திருச்சபைக்கு தேவையான வழிநடத்தலை உயிர்த்த கிறிஸ்து உடனிருந்து வழங்குகிறார் என்பதற்கு எம்மாவுஸ் நிகழ்வு ஒரு சிறந்த சான்றாகும். உயிர்த்த கிறிஸ்து தம் சீடர்கள் மீது பொழிந்த ஆவியின் அருட்கொடைகள், நற்செய்திப் பணியில் பற்றியெரியும் இதய ஆர்வத்தோடு அவர்களை பணியாற்றத் தூண்டியது.

உயிர்த்த கிறிஸ்துவை சீடர்கள் கண்டுகொண்ட போது நற்செய்திப் பணிக்கான புதுப்பார்வையைப் பெற்றுக்கொண்டார்கள். எம்மாவுஸ் சீடர்களின் அகக்கண்களைத் திறந்த கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஒளியிலே திருச்சபையானது தனது விசுவாசக் கண்களை அகலத் திறந்து தன் நற்செய்திப் பணிக்கான எல்லைகளை நாற்புறமும் விரிவுபடுத்துகிறது. "எம்மோடு தங்கும்" என்ற எம்மாவுஸ் சீடர்களின் ஆதங்கம், நற்செய்திப் பணிக்கான திருச்சபையின் ஒருமித்த இறைவேண்டலாக மாறுகிறது. எம்மாவுஸ் சீடர்களின் புறப்பார்வையிலிருந்து உயிர்த்த கிறிஸ்து மறைந்தாலும் திருச்சபையின் நற்செய்திப் பணி வாழ்வில் உயிர்த்த கிறிஸ்து உடனிருந்து வழிநடக்கிறார்.

## முடிவாக

ஆண்டவர் இயேசு தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் அழைத்து தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் பன்னிருவரை நியமித்தார். தம் இறப்பாலும் உயிர்த்தெழுதலாலும் நமக்கு நிறைவாழ்வளித்து எல்லாவற்றையும் புதுப்பிக்கும் மறைத்திட்டத்தை ஒரே முறையில் தம்மில் நிறைவேற்றி விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் கொண்டவராய், தந்தையால் தாம் அனுப்பப்பட்டதுபோலவே திருத்தூதர்களையும் அனுப்பி வைத்தர். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்பது உயிர்த்த கிறிஸ்து திருத்தூதர்களுக்கு மட்டுமல்ல மாறாக திருச்சபை முழுவதற்கும் கொடுத்த கட்டளையாகும். எனவே உயிர்த்த கிறிஸ்து தரும் நிறைவாழ்வைப் பரப்புகின்ற கடமையானது கிறிஸ்துவின் வெளிப்படையான கட்டளையால் திருச்சபையின்மேல் சுமத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து சென்ற அதே வழியில் திருச்சபையும் செல்கிறது. கிறிஸ்துவின் வழியோ ஏழ்மை, கீழ்ப்படிதல், பணிவிடை புரிதல், சாவுக்கு இட்டுச் சென்ற தற்கையளிப்பு. இச்சாவிலிருந்து உயிர்த்தெழுந்து வெற்றி வீரராக வந்தார். இத்தகைய எதிர்நோக்கோடுதான் திருச்சபை வழி நடக்கிறது கிறிஸ்துவின் உயிர்ப்பினோடு உதயமான திருச்சபையின் நற்செய்திப் பணியால் கிறிஸ்துவின் மறையுடல் உயிர்த்துடிப்புடன் செயலாற்றுகிறது.

## Bibliography


1. Second Vatican Document
2. Resurrection Narratives by Herman Hendrickx, c.i.c.m
3. Procliaiming His Kingdom by John Fuellenbach, SVD
4. The Kingdom of God by John Fuellenbach, SVD

# அன்பியமும் நற்செய்தியறிவிப்பும்

அருள்திரு M.V.E. ரவிசந்திரன்

## இரு முற்குறிப்புக்கள்

**1. அன்பியம் என்பது** அயலில் வாழும் சில கிறிஸ்தவ குடும்பங்கள் ஒன்றிணைந்து இறைவார்த்தையின் ஒளியில் தமது வாழ்வின் சகல அம்சங்களையும் நெறிப்படுத்திச் செல்ல மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகும். இவ்வாறான முயற்சி 1950களிலே லத்தீன் அமெரிக்காவிலே ஆரம்பிக்கப்பட்டது. ஆதிக்கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை முறையை மீட்டெடுக்க முயலும் இம்முயற்சி அங்கு அடித்தள குழுமங்கள் (base communities) என்று அழைக்கப்பட்டது. இதன் உயிரோட்டம் காரணமாக மிக விரைவாகவே ஆபிரிக்கா, ஆசியா கண்டங்களுக்கும் இவ்வாழ்க்கை முறை பரவியது. ஐரோப்பியாவிலும் கூட இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தள சூழ்நிலைக்கேற்ப தனித்துவமாக வாழ்க்கை முறையையும் பணி வீச்சையும் வெளிப்படுத்தும் இவ்வமைப்புக்கள் பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. அடித்தள குழுமங்கள் (base communities), அடிப்படை கிறிஸ்தவ குழுமங்கள் (basic christian communities - BCCs), அடிப்படை திருச்சபை குழுமங்கள் (basic ecclesial communities - BES), அயலவர் குழுமங்கள் (Neighborhood communities), சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் (SCCs) என்பன அவற்றுள் சிலவாகும். தமிழ் நாட்டில் இத்தகைய குழுமங்களுககு 'அன்பியங்கள்' எனப் பெயர் சூட்டப்பட்ட நிலையில் ஈழத்தமிழர்களாகிய நாமும் அதே சொல்லை எம்மத்தியில் மலர்ந்து வரும் ஆதிக்கிறிஸ்தவ வாழ்க்கை முறையை சம காலங்களுக்கு ஏற்ற வகையில் மீட்டெடுக்கும் முயற்சிகளுக்கு வழங்கி வருகின்றோம்.

**2. நற்செய்தி அறிவிப்பு என்பது** இக்கட்டுரையில் "கடவுளாட்சி நெருங்கி விட்டது" மனம் திரும்பி **இந்நற்செய்தியை** நம்புங்கள் என்ற இயேசுக் கிறிஸ்துவின் அறைகூவலில் தொனிக்கும் உட்பொருளிலேயே பயன்படுத்தப்

படுகிறது. அதாவது மதமாற்றத்தை முதல் விளைவாக நாடி நிற்கும் எண்ணத்தை ஊட்டக்கூடிய மறையறிவிப்பு என்ற சொற்றொடர் காரணமாகவே தவிர்க்கப்பட்டு ஏழைகளோடும், துன்புறுவோரோடும், ஒடுக்கப்பட்டோரோடும் இறைவன் இருக்கின்றார் என்ற நல்ல செய்தியை உலகெங்கும் பறைசாற்றும் கிறிஸ்தவ கடமையை வலியுறுத்தும் 'நற்செய்தியறிவிப்பு' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இங்கு மதமாற்றம் ஒரு பக்க விளைவாக நிகழலாம். ஆனால் மக்களெல்லாம் குறிப்பாக துன்புறுவோர் இறைவனில் நம்பிக்கை கொணடு விடிவை அனுபவிக்க எழுச்சி காண வழி செய்வதே முதன்மை நோக்கமாக கொள்ளப்படுகிறது.

## அறிமுகம்:

"இறைவன் சமைக்கும் போது புகை கிழம்பாது" என்பது ஒரு சாம்பியா நாட்டுப் பழமொழி. இது இறையாட்சியை பயிரின் வளர்ச்சியோடு ஒப்பிடும் இயேசுவின் உவமையை நினைவூட்டுகிறது. பயிர் வளருவதை யாரும் காண்பதில்லை அது தானாக வளர்கிறது. அதற்குரிய சூழல்கள் ஏற்படுமிடத்து அது தானாக வளர்ந்து பயனளிக்கிறது. இறையாட்சியை இதற்கு ஒப்பிடும் இயேசு இறையாட்சியின் தம்பட்டம் அடிக்காத தன்மையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அன்பியங்களிலிருந்து மலரும் நற்செய்தியறிவிப்பும் இதைப் போன்றதே. மலரிலிருந்து தானாக கிளம்பும் நறுமணம்போல அன்பியங்களிலிருந்து நற்செய்தியறிவிப்பு இயல்பாக மலரும். பிரசுரங்களுக்கும், ஒலிபெருக்கி முழக்கங்களுக்கும், மற்றைய மதத்தவரைப் புண்படுத்தும் மூன்றாம் தர மதவிமரிசனங்களுக்கும் அப்பால் இயேசுவின் நற்செய்தி அன்பியங்களால் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையில் அழகாக காவிச் செல்லப்படும்.

## இல்லங்களில் கூடிய ஆதித்திருச்சபை

இல்லத்திருச்சபைகளே கிறிஸ்தவத்தின் நாற்று மேடையாகத் திகழ்ந்தன என்பது திருத்தூதர்பணி நூலையும், பவுலின் திருமுகங்களையும், ஆதித்திருச் சபையின் வரலாற்றையும் ஆராயும் போது வெளிப்படும் உண்மையாகும். பலி செலுத்துவதற்கு யெருசலேம் தேவாலயத்திற்கும் இறைவார்த்தையை (பழைய ஏற்பாட்டை ~ இதுவே அப்போஸ்தலர் காலத்தில் இறைவார்த்தையாகக் கருதப்பட்டது) அறிவதற்குச் செபக்கூடங்களுக்கும் சென்ற ஆதிக் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்பதற்கும், அப்போஸ்தலரின் படிப்பினைகளை கேட்பதற்கும் செபிப்பதற்கும் விசுவாசிகளின் இல்லங்களில் கூடினர். இவ்வாறாக ஒன்று கூடலில் மலர்ந்த

நட்புறவிலே தம்மிடம் இருந்ததைப் பகிர்ந்து கொள்ள முன் வந்தனர் ஆக இந்த இல்லத் திருச்சபைகளில் தான் கிறிஸ்தவம் முந்த முந்த வாழப்பட்டது. இந்த ஒன்றுகூடல்களில் கிடைக்கும் உற்சாகத்தினாலும், ஊட்டத்தினாலும்தான் அவர்கள் இயேசுவை அறிவிக்கும் பணிக்குப் புறப்பட்டார்கள். உதாரணமாக அந்தியோக்கியாவில் கூடிய கிறிஸ்தவர்கள் தூயபவுலையும் பர்ணபாவையும் (தி.ப. 13 : 1-3) பணிக்கு அனுப்பி வைப்பதைக் காணுகிறோம். பணிக்குச் செல்கிறவர்கள் மீளத் திரும்பி வந்து தமத பணியனுபவங்களை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கின்றனர். இது அந்தக் குழுவை மகிழ்ச்சி கொள்ளவும் கிறிஸ்தவ பணிவாழ்விலே புத்தெழுச்சி கொள்ளவும் செய்கிறது. மேலும் கிறிஸ்துவைப் பற்றி அறிய விரும்பியவர்கள் இந்த இல்ல ஒன்றுகூடல்களுக்கும் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் அப்போஸ்தலர் படிப்பினைகளைக் கேட்பதற்கும் செபிப்பதற்கும் தூண்டப்படுகிறார்கள். இவ்வாறாக ஆதித்திருச்சபையானது பல்வேறு இல்லங்களிலே ஒன்று கூடும் சிறு குழுமங்களின் திருச்சபையாகவே இருந்தது என்பதும் அவை தம்மை மட்டுமே நோக்கியவையாக அல்லாமல் மற்றவர்களை நோக்கிய பணி ஆர்வத்தால் தூண்டப்பட்டவையாக இருந்தன என்பதும் அவதானிக்கப்பட வேண்டியது. வரலாற்றிலே இடைக்காலத்தில் திருச்சபை தொலைத்துவிட்ட இந்த ஆரம்பகாலப் பரிமாணத்தையே அன்பியங்கள் சமகாலச் சூழமைவிற்கேற்ப மீளக் கண்டு பிடிக்க முயல்கின்றன.

## திருச்சபையின் போதனையில் அன்பியமும் நற்செய்தியறிவிப்பும்

திருச்சபையின் உத்தியோகபூர்வ போதனைகள் பலவற்றில் அன்பியங்களின் நன்மைத்தனமும் அவை எவ்வாறு நற்செய்தியறிவிப்புக்கு உகந்த கருவிகளாக இருக்கின்றன என்பதும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் சில தெரிவு செய்யப்பட்ட மேற்கோள்களை இங்கு பதிவு செய்ய விரும்புகிறோம்.

● 2ம் வத்திக்கான் சங்கம், பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி எண் 17.

பொதுநிலையினர் தங்களிடையே சிறுசிறு குழுக்களாக கூடி உரையாடல் நடத்துவது உகந்ததாகும். இவ்வாறு உண்மையான **அன்பின் சான்றே திருச்சபையின் அடையாளமென மற்றவர்க்கும் விளங்கும்.**

● நற்செய்தி அறிவிப்பு (Evangelii Nuntiandi) எண் 58.

அடிப்படைச் சமூகங்கள் (அன்பியங்கள்) உண்மையான உறவு ஒன்றிப்பின் வெளிப்பாடாகவும் இன்னும் **ஆழ்ந்த உறவு ஒன்றை கட்டியெழுப்பும் கருவியாகவும் அமையும்.**

● பொது நிலையினரின் மறைத்தூது (Christifideles laics) எண் 26.

சிறு கிறிஸ்தவ சமூகங்கள் திருச்சபையின் உண்மையான ஒன்றிப்பு அடையாளங்களாகவும் தங்களது ஞானமேய்ப்பர்களோடு இணைந்து ஆற்றும் **நற்செய்தியறிவிப்புப் பணியின் மையங்களாகவும் திகழ்கின்றன.**

● மீட்பரின் பணி (Redemptoris Missio) எண் 51.

கிறிஸ்தவ அடித்தளச் சமூகங்கள் (அன்பியங்கள்) திருச்சபையின் உயிராற்றலுக்கு ஓர் அடையாளமாகும். பயிற்சிக்கும், **நற்செய்தியறிவிப்பதற்கும் ஒரு கருவியும் புதிய சமுதாயத்தின் தொடக்கமும் ஆகும்.**

● ஆசியத் திருச்சபை (Ecclesia in Asia) எண் 25.

"ஒன்றிப்பையும் பங்கேற்பையும் வளர்க்கும் கருவிகளாகவும் **நற்செய்தியறிவிப்பின் சக்தியாகவும் திகழ்கின்றன**" "புதிய சமூகத்தின் தொடக்கமாக இது அமைகிறது அதுவே **அன்புக் கலாசாரத்தின** வெளிப்பாடாகவும் அமையும்"

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள உலகளாவிய திருச்சபையின் போதனை ஏடுகள் பலவும் அன்பியங்களின் நற்செய்தியறிவிப்பு ஆற்றலை இனங்கண்டு அவற்றை விதந்துரைத்துள்ளன. இவற்றை விட லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசிய ஆயர் மன்றங்களின் பல்வேறு அறிக்கைகளும் அனுபவரீதியாக அன்பியங்களின் நற்செய்தியறிவிப்பு ஆற்றல் பற்றிப் பேசியுள்ளன. ஆசிய ஆயர் மன்றத்தின் 'பான்டுங்' ஏடும் லத்தீன் அமெரிக்க ஆயர் மன்றத்தின் புயூபிலா மற்றும் மெதலீக் ஏடுகளும் இவ்விடயம் பற்றி விரும்புபவர்கள் படித்திருக்க வேண்டிய முக்கிய ஏடுகளாகும்.

## நற்செய்திப் புளிக்காரங்களாக அன்பியங்கள்

ஒரு துறவற குழுமத்தைப் போல அன்றாட வாழ்வின் சூழலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வு முறையல்ல அன்பிய வாழ்க்கை முறை. இது மக்களின் நாளாந்த வாழ்வுச் சூழலில் இடம் பெறுகிறது. வாழ்வின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறது. அவற்றை இறைவார்த்தை ஒளியிலே ஆய்வு செய்கிறது. அதனால் சூழமைவுக்கேற்ற இறையியலும் செயற்பாடும் அங்கே மலர்கிறது. எனவேதான் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நடைமுறையில், நற்செய்தியறிவிக்கும் பணிவீச்சை அவை பெறுகின்றன.

அயலில் உள்ள பிறமத சகோதரங்கள் தம் அயலில் ஒன்று கூடும் கிறிஸ்தவர்களை முதலில் வியப்புடன் பார்க்கிறார்கள். ஒருவேளை சிறிது

சந்தேகத்துடனும் உற்று நோக்குகிறார்கள். நாளாவட்டத்தில் அக்கிறிஸ்தவர் களிடையே வளர்ந்து வரும் அன்புறவையும் கூட்டொருமைப்பாட்டையும் வியப்புடன் பார்க்கிறார்கள். அவர்கள் ஒன்று கூடிப் பிரச்சினைகளைக் கையாளும் முறைகளாலும் அவர்களுடைய பணி வாழ்வாலும் கவரப்படுகின்றார்கள். என்ன நடக்கிறது என அறிய முனைகிறார்கள் தாமும் அவர்களோடு இணக்கமாகவும் அன்பாகவும் நடக்கத் தொடங்குகிறார்கள். தமது இல்லங்களிலும் அன்பியக் கூட்டங்களை நடாத்துமாறு கேட்கிறார்கள். இவ்வாறு அன்புச் சமூகமாக மலரும் ஒரு அன்பியம் அதன் அயலில் உள்ளவர் மத்தியில் ஒரு நறுமணம் வீசும் இயேசுவின் நற்சான்று மலராக வளர்ச்சி காணுகிறது.

மேலும் அன்பியமாக ஒன்று கூடும் ஒரு குழுவின் செயற்பாடுகள் ஆரம்பத்திலே தன்னலமானவையாக இருந்தாலும் நாளா வட்டத்திலே அவர்கள் அயலில் வாழும் ஏனைய மதத்தவரையும் நோக்கி அன்புக் கரம் நீட்டுகிறார்கள். ஆரம்பத்தில் தம் குழுவில் உள்ள குடும்பங்களிடையே பணியிலும், பகிர்தலிலும் ஈடுபட்டவர்கள் படிப்படியாக தமது அயலில் உள்ள ஏணையோரின் தேவைகளையும் பிரச்சினைகளையும் கருத்திலெடுக்கத் தொடங்குகிறார்கள். இவ்வாறு கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறையன்பு அன்பியங்களுக்கூடாக கிறிஸ்துவை அறியாத மக்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

அடுத்ததாக அன்பியங்கள் இன்னும் ஒரு படிநிலை வளர்ந்து தமது சமூகத்தில் உள்ள பொதுப்பிரச்சினைகளைக் கையாளத் தொடங்கும் போது அதாவது கிராம எழுச்சி, பெண்கள், சிறுவர் தொழிலாளர் உரிமை பேணுதல், சமூகச் சீரழிவுகளை ஒழித்தல் போன்ற செயல்களில் ஈடுபடத் தொடங்கும் போது உண்மையான எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் இறையாட்சி தம் மத்தியிலே மலர்வதை மக்கள் காணத் தொடங்குகிறார்கள். இவ்வாறு மீட்பளிக்கும் இறைவனின் வல்லமையை அயலவர்கள் காணத் தொடங்க அன்பியங்களின் வளர்ச்சி நற்செய்தி அறிவிப்பின் எழுச்சியாக மாறி நிற்கிறது.

## அடிப்படை மனிதக் குழுமங்கள்

மேற்சொன்னவாறு அன்பியங்களின் வாழ்வாலும் பணியாலும் பிறசமய சகோதரங்களோடு ஏற்படும் தொடர்பின் விளைவாக சிலர் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவர்களாக வரவிரும்பலாம். அத்தகைய சூழல்களில் அவர்களது நோக்கம் தெளிவாகக் கருத்திலெடுக்கப்பட்டே திருமுழுக்கு வழங்கப்பட வேண்டும். அல்லாது போனால் அது மனமாற்றத்தை விட மதமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு

தவறான அணுகுமுறையாக அமைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு. இந்நிலையில்தான் பல்மதச் சூழல்கொண்ட ஆசியாவில் அடிப்படை மனிதக் குழுக்கள் (Basic Human Communities) பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. அயலிலுள்ள பல மதங்களைச் சேர்ந்தவர்களும் மத அடிப்படையில் அல்ல ஆனால் மனித அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதை ஊக்குவிப்பதை இத்தகைய குழுக்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. மதங்களுக்கிடையிலான முரண்பாடுகள் வலுத்து வரும் நாடுகளில் இத்தகைய குழுக்கள் மத நல்லிணக்கத்தின் தோற்றுவாய்களாக அமையக் கூடும். இத்தகைய குழுக்களை உருவாக்கும் முயற்சியில் கிறிஸ்தவ நற்செய்தி அறிவிப்பானது புதிய தளங்களையும், வீச்செல்லைகளையும் பெற்றுக் கொள்கிறது.

## முடிவாக

"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே
நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல
அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால்
நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்." யோவான் 17:21

யோவான் நற்செய்தியின்படி இயேசுவின் திருச்சபைக்கான செபம் கிறிஸ்தவர்களின் ஒன்றிப்புக்காக செபிக்கிறது. இத்தகைய ஒன்றிப்பே உலகத்தை நம்பவைக்கக் கூடிய உயரிய சாட்சியம் என்பது இறைவார்த்தைகள் மூலம் வெளிப்படுகிறது. அன்பியங்கள் இயேசு விரும்பிய இந்த ஒற்றுமை வாழ்வின் சாட்சியங்களாக, குன்றிலிட்ட தீபங்களாக ஒளிர்கின்றன.

**அன்பியங்கள் தழைத்தோங்கும் பொது உலகம் இயேசுவை நிச்சயம் நம்பும்.**

## துணையானவை

மரியயோசவ், அன்பியங்கள் வழி நிறைவாழ்வு, தமிழக அன்பியப் பணிக்குழு மதுரை 2002

James o' Halloran, Small Christian Communities, Cleristian Publication Bangalore 1996.

Signs of hope, Orbis Book, Newyork 1991

# இவ்விதழின் இறையியலாளர் - 14 -

அருட்சகோ. A. ஜேம்ஸ் நாதன்

# புனித பெரிய அல்பேட்

# 1206 -1280

## பிறப்பும் அழைபபும்

புனித பெரிய அல்பேட் 1206ம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்தார். இவர் ஒரு பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அறிவாற்றல் மிக்க இளைஞனாக பதுவையில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் மருத்துவம், இயற்கை விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்றுத் தேர்ந்தார். 1216ல் சாமிநாதர் சபையில் சேர்த்து கல்வி பயின்று அப் பல்கழலக்கழகத்திலேயே ஒரு பேராசிரியராகவும் கடமையாற்றினார். 1240ல் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்று, இறையியலாளர்களான தோமஸ் அக்குவாயினாஸ் போனவெந்தர் ஆகியோருக்கு கல்வி புகட்டி ஒரு பேராசிரியராகவும் பணியாற்றினார்.

## பல்துறை விற்பன்னராக

இவர் தனது அறிவுத்திறன் மூலம் இறையியலுக்கும் இயற்கை விஞ்ஞானத்துக்கும் மெய்யியலுக்கும் பெரிதும் பங்களிப்பு செய்தார். இயற்கை விஞ்ஞானத்தின் பல கிளைகளான அளவியல், கணிதம், ஒழுக்கவியல், பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்று பல பயன்தரு புத்தகங்களை எழுதியுள்ளார். அக்காலத்தில் பரவியிருந்த பல தவறான மெய்யியல் கருத்துக்களை எதிர்த்து பல கட்டுரைகளை எழுதினார்.

## ஒரு இறையியலாளன்

இறையியல் கருத்துக்களை மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் பல விளக்கவுரைகளை எழுதியுள்ளார்.

-Summa de creaturis - படைப்புக்கள் பற்றிய அதிஉயர் இறையியல் திரட்டு

- Sententiae - விளக்கவுரைகள்

-De unitate intellectus contra Averroem - Regarding the unity of the intellect against Averro.

-Summa Theologica - அதி உயர்ந்த இறையியல் திரட்டு

இவ் புத்தகங்கள் ஊடாக கடவுள் இருப்பு கொள்கையை பல வழிகளில் விளக்கியுள்ளார். இறையியல் ஆனது மனித அறிவில் அல்ல மாறாக கடவுளின் வெளிப்படுத்தலில் (Revelation) தங்கியுள்ளது என குறிப்பிடுகிறார். மனித உடலின் இறப்புக்கு பின் மனிதனின் ஆன்மா இறப்பதில்லை என்றும் குறிப்பிடுகிறார். மேலும் கடவுள் பற்றி உண்மைகளை விளங்கிக்கொள்ள இறை வார்த்தைகளை நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்.

பழைய ஏற்பாட்டு நூல்களான திருப்பாடல்கள், இறைவாக்கினர் எரேமியாஸ், தானியேல் என்பவற்றுக்கு விளக்கவுரைகள் எழுதியுள்ளார். மேலும் புதிய ஏற்பாட்டு நூல்களான நான்கு நற்செய்தி நூல்களுக்கும் விளக்கவுரைகள் எழுதியுள்ளார்

## ஓர் ஆன்மீகவாதி

இவரின் சிறந்த அறிவாற்றலை கண்டுணர்ந்த திருத்தந்தை 4ம் அலெக்ஸ்சாண்டர், இவரை ஆயராக திருநிலைப்படுத்தினார். 1262ல் றட்டிஸ்பொன் மறைமாவட்டத்தில் நிலவிய பல பிரச்சினைகளை தீர்த்து ஆன்மீகதாகத்தோடு இறைவார்த்தையை மக்களுக்கு எடுத்துக்கூறி தேவதாயின் மீது பக்தி கொண்டு அன்னை வழி வாழ அழைப்பு விடுத்தார். 1274ல் நடைபெற்ற லியோன் (Lyons) சங்கத்திலும் பங்குபற்றி எமது வாழ்க்கையில் கடவுளை அறிவது முதன்மையானது என குறிப்பிடுகிறார்.

## நிறை அமைதியில்

தன்னுடைய உன்னதமான அறிவாற்றல் மிக்க வாழ்க்கையை முடித்தக் கொண்டு 1280ல் இறைபதம் அடைந்தார். இவர் 1931ல் திருத்தந்தை 11ம் பத்திநாதரால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டு திருச்சபையின் மறைவல்லுனராகவும், இயற்கை விஞ்ஞானத்தை படிப்பவர்களின் பாதுகாவலாகவும் ஏற்படுத்தப்பட்டார்.

# synopsis

## CHURCH DOCUMENTS ON EVANGELIZATION

Church by its nature is missionary, for it is sent by its Founder , Jesus Christ. Therefore, evangelization becomes the duty and the mission of the church. This underlining factor is expressed in all the encyclicals and other documents of the church. When we analyse these documents we can note also the development of thoughts and understanding with regard to the responsibility - the evangelization. Very specially the second Vatican Council (1962-1965) gave a new out look to the mission of evangelization.

Among the post Vatican II documents "Ad gentes", "Evangelii Nuntiandi", and "Redemptoris Missio" are important and remarkable "Ad gentes" affirms that the Church is "Sent' to preach the Good News to the whole world. Also, it underlines the necessity for the spreading of the Gospel, that all men and women come to know the Truth and be saved. Evangelii Nuntiandi is the first Apostolic Exhortation that used the term 'evangelization' instead of "Mission". Pope Paul VI says here that evangelization is the vocation, grace and the sign of the Church. According to it, not only the people are evangelized but also the church itself is evangelized. "Redemptoris Missio" speaks about the challenges ahead of the third century. In evangelization, this encyclical encourages the usage of the modern technological media facilities. Thus, in summary all these documents and the encyclicals of the Church request all the Christ's faithful to involve themselves in

the task of evangelization and to work for the wholistic redemption of all humanity.

***Confucious O.M.I***

# THE ROLE OF THE CHRISTIAN FAMILIES IN EVANGELIZATION

"And He said to them, go into all the world and proclaim the Good news to the whole Creations" (MK 16/15)

The family is the nucleus of society and is a gift from God to humanity. The members of the family have certain rights, duties and responsibilities among themselves and towards society. The family is the nursery where all the good things are taught to the children who are the future leaders of Society. The family plays a prominent role in socializing the children in accordance with the norms and values of the society.

The church earnestly asked the families to be the witness of Christ. To be a witness of Christ means first of all one should live or practice the values of Christ in one's day today endeavours. The pathetic thing in today's society is that due to various forms of Social changes such as Globalization, Secularization and consummerism families are in disorder. They are unable to bear the challenges that vehemently affect the harmonies of the families.

It is high time for us to retreat into our life situation and take all remedial measures in order to reformulate the uniqueness of the family. Life is a journey towards our Goal embracing everybody with love of God and Man.

***Miss T. Denny***

# THE MISSIONARY METHODS OF BLESSED JOSEPH VAZ

What ever project is carried out with good preparation and with foresighted plan will bear fruit very much. In that way the missionary methods of Fr. Joseph Vaz was a successful ministry in Sri Lanka both during his life time and for 150 years even after his death as well.

During his ministry he had been handling different methods unlike the Portuguese missionaries who were able only to transplant the existing Church of Portugal in Ceylon. Most of the Europian missionaries were the chaplains of the troops. So they could not reach out the people properly always and at anytime they want to. At the same time they were able to do only what they are dictated by their governments. But as far as the ministry of Fr. Joseph Vaz concerning he was the first Asian missionary who was trying to organize the church in Ceylon which was almost in the state of dying without a priest for thirty years. At the same time the added responsibilities given to him as Vicar General of Ceylon and the superior of the Oratorions in Ceylon really gave him power to plan and carry out his mission in such a way on his own according to the needs and condition of the people here with total commitment and ardent missionary zeal.

Onr of his brilliant foresight acts in his missionary life was that before he get into the field he toiled hard to reorganize his congregation into an Oratory of St. Philip Neri. When this community was at the point of being dissolved, his choice as the superior gave a new impetus to the Oratory and this act bore fruit of a regular supply of priests to Ceylon for 150 years even after the death of Fr. Vaz.

Thus his tireless work, staying and feiling with poor and the sick, his personal contacts and visits of the catholic communities total submission and faith in God's providence, and courage to face any challenges even to the point of death threatening; all these became stepping stones for him in his missionary method and life. Through his tireless mission he joined North and South for which he is known as the "Apostle of Ceylon"

**Bro S. Lacouz Figurado**

## CHURCH'S PROCLAMATION AND OTHER RELIGIONS

Pope John Paul II mentions in "Ecclesia in Asia" "the first thousand years, the cross of Jesus our Redeemer was poured to the soil of Europe then the second thousand years it was in the soil of Africa and America and earnestly asked us to pray that the cross of Jesus will be poured to Asia for the third thousand years". This document explains clearly that in the amidst of the Asian cultural, Political, Economical, Religious, Social and spiritual situations, how can we proclaim the Good news of Jesus Christ to the Asian countries. We know that Asia is a Multi-cultural, multi- language and multi-religious continant.

The disciples of Jesus Christ have in their hearts in letter and follow the commandments of lòve of Jesus Christ in their daily lives. It is the witness from the Gospel. "…..All authority in heaven and on earth has been given to me. Go therefore and make disciples of all nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, and teaching them to obey everything

that I have commanded you. And remember, I am with you always, to the end of the age" (mt 28:18-20). Through this massage Jesus promised that He is always with us. Therefore it is our duty to proclaim Jesus' Good News to the whole world even in the admist of difficulties.

Therefore, proclamation of the Good News is the first and foremost duty of the church. St. Paul says, "..............., and woe to me if I do not proclaim the gospel" (I cor 9:16). Hence every member of the church is called to announce the word of God. And also, we have to respect other religions' rights, duties and religious orders because they are also children of the loving God . Jesus Christ died on the cross for the salvation of all.

***Bro. Balathas Brian***

# THE RESURRECTION OF JESUS IS THE DAWN OF THE EVANGELIZATION

The second Vatican firmly teaches that, according to the words of Jesus "As the Father has sent me, so I send you" (Jn 20:21), the Church in itself is a missionary. The Church keeps on preaching the Good News with the hope and assurance given by the Risen Lord, "Behold, I am with you always, until the end of the age" (Mt 28:20). The Apostles, despite Jesus' repeated teaching about His mission, had not understood the real meaning of His Messianic mission until His resurrection. The death of their master shattered all their hope but His resurrection gave them new power. They were not only empowered to preach the Gospel but also were

enlightened that their mission was something very unique and the continuation of the mission of the One who sent them. The resurrection was the central theme of the preaching of the Apostles and it still remains the same. As the Risen Lord had accompanied the disciples on the way to Emmaus, He still accompanies the Church on the way of this evangelization. The resurrection of Jesus is the dawn of the evangelization of the Church; the central theme of its evangelization and the final goal the whole Church has to experience.

**Fr. A. Mahan Aloycious**


## SMALL CHRISTIAN COMMUNITIES AND EVANGELIZATION

In the early church the Christians gathered in houses for prayer, breaking of the bread and fellowship. These domestic churches remained as centres of Christian living and evangelizing mission. In the present world, the SCCs try to re-line this original ecclesial gatherings in a manner that suits the contemporary world.

The teachings of the magisterium have in many instances identifued the evangelizing thrust of these SCCs and promoted them. The direct experience in this communities too support this facts. The Asian church in its multi-religious context experiments not only SCCs but also basic human communities. No doubt, like leaven these small communities can evangelize the world from within.

**Fr. M.V.E. Ravichandran**

# குறுக்கெழுத்துப் போட்டி இல.14




அனுப்புபவரின் பெயர் :

விலாசம் :

## இடமிருந்து வலம்

1. இரண்டாம் அருள் சின்னப்பர் 6)
6. துன்பத்துக்கு எதிரானது (4)
7. திருச்சபை வரலாற்றில் விட்ட இவற்றுக்காக திருத்தந்தை மன்னிப்பு கேட்டார் (5)
9. அன்னை திரேசா இந்நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார் (6) (வலமிருந்து இடமாயுள்ளது)

## மேலிருந்து கீழ்

1. அப்போஸ்தலர் என்பதின் புதிய மொழிபெயர்ப்பு (6)
2. முதலாவது திருத்தந்தை (3) (தலைகீழாயுள்ளது)
3. தற்போதைய திருத்தந்தை இந்த நாட்டை சேராதவர் (4) (குழம்பியுள்ளது)
4. மைந்தன் (4)
5. அன்னை திரேசா இறக்கமுன்னர் இவ்வாறு இருந்தார் (6) ( தலைகீழாயுள்ளது)
8. ஒரு ஆரம்பம் (2)

✿ விடைகளில் சில டிசம்பர் 2003 இதழில் உள்ளன.

✿ விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக்குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.

✿ விடைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் ஏப்ரல் 30, 2004.

✿ உங்கள் நண்பர்களுக்கும் இப்போட்டியை அறிமுகப்படுத்தி பங்குபற்றச் செய்யுங்கள்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.14
இறையியல் கோலங்கள்
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.13

### சரியான விடைகளும் முடிவுகளும்

**இடமிருந்து வலம்**

1. வெள்ளிவிழா
3. ஞானசேவியர்
5. இத்தாலி
8. குவலயம்
9. காந்தம்
11. தேவதுரோகம்

**மேலிருந்து கீழ**

2. விவிலியம்
4. உயிர்
6. தாலந்து
7. தம்பி
10. ரோம்

## பரிசு பெறுவோர்

1ம் பரிசு : A. யா. கனிஸ்ரா நித்தியா,
இல 36, ஆனந்தம் பண்ணை, D8, உருத்திரபுரம், கிளிநொச்சி.

2ம் பரிசு : பிரதீபா பேக்மன்
758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

3ம் பரிசு : ஜெயக்குமார் அருணோதயன்
புனித லிகோரியார் ஆலய வீதி, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

## பாராட்டுப் பெறுவோர்

எ. லூமின் கொன்சேகா, து. டெனி, P.S. சங்கர், தே. ஜென்சி, செ. றியோ, அ.பி. பிரேமசீலன், ஆ. இரதீசா, க. மேரி அருள்மதி.



# ஈஸ்ரர் வாழ்த்துக்கள்

## கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு

நாம் விரும்பும்
அமைதியையும் சமாதானத்தையும்
எம் உள்ளங்களிலும்
நாட்டிலும் பிறப்பிக்க
ஆசிப்பதோடு ஈஸ்ரர் நல்
வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டு சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S $ 10
Euro 8

தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க:
இறையியல் கோலங்கள்
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 2482

# IRAI IYAL KOLANGAL

*A Tamil Theological Quarterly*

Annual Subscription: Local (Incl. postage) Rs 100/=
Foreign (Incl. postage) US $ 10
Euro 8
Single copy Rs 25/=

Correspondence to:
Irai iyal Kolangal
St. Francis Xavier's Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka
Tel: 021 222 2482